விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 22 முறை 22 இதழ் 240

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-10-1985

“இலங்கை இனப்பிரச்னை:

## மத்திய அரசுக்கு அக்கறை இல்லை!”

### கலைஞர் குற்றச்சாட்டு

(சென்னை) என்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் மு. கருணாநிதி: “தமிழீழம் அமைப்பதன் மூலமே இனப்பிரச்னைக்கு கலைஞர் நிரந்தரத் தீர்வு காணலாம்” 

(5-ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவில் கூட்டு முன்னணியின் இருவ[ர்]

(சென்னை)

இலங்கையில் போர்நிறுத்த உடன்பாட்டை மேற்பார்வையிட இலங்கை அரசினால் நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்புக்குழுவில் ஈழதேசிய[விடு]தலை முன்னணி சார்பாக தலைவர்களில் இரண்டு பே[ர்] சேர்த்துக்கொள்ளப்பட்டு இக்குழு விரிவுபடுத்தப்படுவதாக சென்னையில் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஈழதேசிய விடுதலை முன்னணி பரிந்துரைத்த இருவர் இக்கண்காணிப்புக் குழுவில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்ற தகவலை இலங்கைத் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி நேற்றுமுன்தினம் உறுதி தெரி

(5-ம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்துக்கு தினம் தினம் வந்து குவியும் அகதிகளில்; குழந்தைகள், இளைஞர்கள், தாய்மார்களில் ஒருபகுதியினரை இங்கு காணலாம் (படங்கள்: ‘தேவா’)

● குண்டு வெடிப்பு ● துப்பாக்கி வேட்டு ● ஹெலிகொப்டர் சூடு!

# வல்வையில் மீண்டும் பதற்றம்!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்ற தொடர்ச்சியான சில சம்பவங்களைத் தொடர்ந்து பெரும்பதற்ற நிலை ஏற்பட்டது.

இருவாகனங்களில் ஒரு கோஷ்டியினர் சென்றதாகவும் பின்னர் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் அதனைத்தொடர்ந்து ஹெலிகொப்டரிலிருந்து அப்பகுதியில் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதனால் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமைகளால் அப்பகுதி மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி அயற்கிராமங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் எவருக்கும் காயங்களோ, உயிர்ச் சேதங்களோ ஏற்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரம் தெரிவித்துள்ளது. (மா)

## பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது!

### ராணுவ வாகனம்கடத்தப்பட்டு சம்பவம் நடந்ததாம்

(திருகோணமலை)

திருகோணமலைப் பகுதியில் உள்ள வாந்தளை பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது இரு மாடிக் கட்டிடங்களினதும், மற்றுமொரு மாடிக் கட்டிடத்தினதும் பெரும்பகுதிகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்று அதிகாலை இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. கந்தளாயிலிருந்து எட்டு மைல் தூரத்தில் மேற்படி பொலிஸ் நிலையம் இருக்கிறது.

இராணுவத்தினருக்குச் சொந்தமான இரு வாகனங்களைக் கடத்திவந்தவர்களே பொலிஸ் நிலையத்தைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது

குறிப்பிட்ட இரு வாகனங்களும் ஆலங்கேணி என்னும் இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன. இதனால் தமக்குக்கு உபத்திரவம் நேரிடலாம் என அஞ்சி அப்பகுதிமக்கள்

(5ம் பக்கம் பார்க்க)

## மதுபானவிற்பனைநிலையங்கள் பூட்டி, திறப்பு எடுக்கப்பட்டன

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரிலுள்ள மதுபான விற்பனை நிலையங்களைவாகனங்களில் வந்த ஒரு கோஷ்டியினர் அவற்றின் உரிமையாளர்களைக் கொண்டு பூட்டி விற்பனை நிலையங்களின் திறப்புக்களை எடுத்துச்சென்றுள்ளனர். நேற்றுக்காலை 10 மணியளவில் வானில்வந்த இக்கோஷ்டியினர் மேலிடத்து உத்தரவு

[5-ம் பக்கம் பார்க்க

## ‘பிதா சிங்கராயரின் குடும்ப டாக்டர் நான்; ராணுவத்தினர் முன் அவரை சோதித்தேன்’

### விசாரணையில் டாக்டர் பிலிப்

(கொழும்பு)

“1982ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி குருநகர் இராணுவமுகாமில் வண பிதா சிங்கராயரைச் சென்று பார்த்தேன் அப்போது மேஜர் குலதுங்கா உடனிருந்தார் நான் பல கேள்விகளைப் பிதா சிங்கராயரிடம் கேட்டேன் மேஜர் குலதுங்கா முன்னிலையில் என்னோடு கதைப்பதற்கும், எனது கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கும் வண பிதா சிங்கராயர் தயங்கினார்” என்று டாக்டர் ஜே பி எஸ் பிலிப் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வண. பிதா ஆபரணம் சிங்கராயருக்கு

(5ம் பக்கம் பார்க்க)

## ஹெலிகொப்டர் துப்பாக்கி பிரயோகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செங்கலடியில் பொதுமக்கள் நடமாடிக்கொண்டிருந்த இடத்தில் ஹெலிகொப்டரிலிருந்து நேற்று நண்பகல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது

ஹெலிகொப்டர் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களைத்தேடி ஓடித்தப்பியுள்ளனர். ஒளிந்துகொண்டிருக்கிறார்களாம்

தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## கொழும்பிலிருந்து யாழ். வந்த லொறியில் பல லட்சம் பெறுமதியான பொருட்கள் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பெறுமதியான பொருட்கள் ஏற்றிவந்த லொறியிலிருந்து சுமார் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பரந்தன் காரடிப்போக்குச்சந்தியில் இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை ஸ்தாபனத்துக்குக் கொண்டுவரப்பட்ட 300 நியூஸ் பேப்பர் கட்டுகளைத் தவிர பாக்குமூடைகள், சக்கரை மூடைகள், லொறி டயர்கள், வாகன உதிரிப்பாகங்கள் கொள்ளையடிக்கப்பட்டனவாம்.

(5 ம் பக்கம் பார்க்க)

## நீதியின் பேரில் கோரிக்கை

கடந்த வெள்ளிக்கிழமை (4-10-85) வி. எம் சண்முகம் நிறுவனத்தின் லொறியில் கொழும்பிலிருந்து ஏற்றி வந்த எனது ரூபா 1,10,000 பெறுமதியான ஸ்ரீலங்கா டயர், டியூப்கள் காரடிப்போக்கில் வைத்து கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

இப்பொருட்கள் பல கஷ்டங்களையும், மனவேதனையையும் அனுபவித்து அக்குடும்பத்திற்காக நடாத்தும் வியாபாரத்திற்காக கொள்முதல் செய்யப்பட்டவை இந்த நஷ்டத்தை எதுவொருவழியாலும் என்னால் ஈடுபடுத்த முடியாது ஆகவே மனிதாபிமான அடிப்படையில் தயவுசெய்து சம்பந்தப்பட்டவர்கள் பொருட்களைத் திருப்பி ஒப்படைக்குமாறு நீதியின் பேரால் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் 1983-ம் ஆண்டு டிசம்பர் 26 ம் திகதியும் ரூபா 2 லட்சம் பெறுமதியான தங்க நகைகளையும் ரொக்கத்தையும் இழந்துள்ளேன் என்பதையும் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

உரிமையாளர்,
சிங்கம் மோட்டர்ஸ் ஸ்ரோர்ஸ்
40/3, கே. கே எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(1126)

# வரி விளம்பரம்

## தேவை

எங்கள் ஹோட்டலுக்கு ... கினாக் இருவர் தேவை ... வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், யாழ் மாநகரசபை ... க்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும் ... ண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும் ஹோட்டல் ரூவெக்ஸ் 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1093

கம்பியூட்டர் பிரோகிரு மிங் வகுப்பிற்கும் எலக்ரோனிக்ஸ் வகுப்பிற்கும் ஆசிரியர்கள் தேவை. அபலட் இன்ஸ்ரிடியூட், 151, செம்மணி றோட் (நாவலர்மார்கட்டு சந்தி) நல்லூர் (1125)

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் பிரயாண முகவர் நிலையத்திற்கு முகாமையாளர், வரவேற்பாளர்/காசாளர் (பெண்) தேவை. முன் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 1117 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1117

## தேவை

EN அல்லது 1 சிறி தொடர் மொறிஸ் மைனர் Honda C 90 மோட்டார் சைக்கிள் தற்போதைய விலையில் உடன் தேவை. விபரங்கட்கு: பதிவாளர், எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட், இருபாலைச் சந்தி. 1123

## விற்பனைக்கு

நெல்லியடி பஸ் நிலையத்திலிருந்து அரை மைலுக்குள் 5 அறை வீடு 7 பரப்புக் காணி கிணறு, மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். S. R. கதிரேசு, 'சிதம்பர வாசா'', கரவெட்டி மத்தி, கரவெட்டி. 1116

இல 86 சிறி 7000 தொடர் இலக்கமுள்ள 135 மசி பெர்குஸன் றைட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு எம். பரநிருபசிங்கம், யாழ்தேவி மில்லுக்கு அருகாமையில், மூளாய் றோட், வட்டுக்கோட்டை. (1124)

### புதிய வகுப்பு

## எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்

இருபாலை, கோப்பாய்.

# A/L 86

**10 மாத**
**துரித மீட்டல் வகுப்பு**

பௌதிகவியல்:
திரு. சத்தியசீலன்

இரசாயனவியல்:
திரு. தில்லைநாதன்

10-10-85 பி. ப. 3-00 மணிக்கு ஆரம்பம்

சிவமயம்

## 90-ம் நாள் நினைவஞ்சலி

### குமரையா இராஜராஜேஸ்வரன்

(இராசா)



மலர்வு:
31-05-1954

உதிர்வு:
10-07-1985

திதி: 08-10-1985

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புச் செல்வமே, உன் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உன் அன்பால் வாடும்!

ஐயா, அம்மா, சகோதரர்கள்; மச்சான்மார், உறவினர்கள், நண்பர்கள்.

சிங்கம்லேன், உடுவில். 1120

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வாரைநகர் என்னுமிடத்தைச் சேர்ந்த விருசித்தம்பி முருகேசு சண்முகம் பெண் பரமேஸ்வரி என்பவரின் மரண சாதனத்தின் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

விருசித்தம்பி முருகேசு சண்முகம் இல. 85 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நிர்வாகிக்கம்
இல. T/3855

மேலேயுள்ள இலக்கம் கொண்டவழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்டதுமான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ஆந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ந் திகதி,

கு. குலசிங்கம்
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது நீதிமன்ற ஆணைப்படி.

த. சங்கரப்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி.
1083

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாய் காலஞ்சென்ற செல்லத்துரை செல்வரத்தினம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்கள் விடயமாக மானிப்பாயில் தற்பொழுது ஐக்கிய ராச்சியத்தில் குடியிருக்கும் செல்லத்துரை செல்வரத்தினம் கைம்பெண் நாகம்மா - இவர்தனது அற்றோனித் தத்துவகாரனாகிய மானிப்பாய் லோட்டன்வீதி ''தர்மவாசா'' என்ற முகவரியில் இருக்கும் நாகலிங்கம் சவுந்தரநாயகம்மூலம் வெளிபடுகின்றார்.

மனுதார்

மரணச் சொத்துரிமை நிர்வாகிக்கம் } 3889/த

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனமில்லாதத்துவ வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றுப்சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள எவரேனும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 25ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1985ம் ஆண்டு வைகாசி மாதம் 17ம் திகதி

நீதிமன்ற ஆணைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்

வரைந்தவர்
சி. இராசேந்திரன்
மனுதாரின் சட்டத்தரணி
23-8-1985

காரணம் காட்டும் திகதி 1985-10-11ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்
பதிவாளர்
1088

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற இரத்தினவேல் இராஜசிங்கத்தின் மரணசாதனமில்லா சொத்து விடயமாக

இறந்தவர்

இராஜசிங்கம் கைம்பெண் சீதோதேவி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

மனுதார்.

இல: 236/ரி

எதிர்

பராய மற்றவர் } 1. கிசோகுமார் இராஜசிங்கம் - 15 வயது

2. கதிரவேல் அருணகிரிநாதன் நுணாவில்கிழக்கு சாவகச்சேரி. 2ம் பிரதிவாதி பராயமற்ற 1ம் பிரதிவாதியின் பாதுகாவலர்.

பிரதிவாதிகள்

மேற்குறிப்பிட்ட மரணச் சொத்து வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதற்கிணங்க பின்னுறதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது. மேலும் பராயமற்ற 1ம் பிரதிவாதியின் நயத்தைப் பாதுகாக்கும் முகமாக ஏன் 2ம் பிரதிவாதியை பாதுகாவலராக நியமிக்கக் கூடாதென்பதற்கும் இவ்வழக்கில் பதியப்பட்ட பின்னுறதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்கும் அக்கறையுள்ள எவரும் தகுந்த காரணம் ஏதும் இருப்பின் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9ந் திகதியன்று தெரிபட்டு அதற்கான காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1985-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 24ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி:

ஆ. குணநாயகம்
பதிவாளர்

வரைவு
வி. பொ. கார்த்திகேசு
மனுதாரின் சட்டத்தரணி
(1100)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

கென்ஸ்மன் லேன், சாவகச்சேரி வாசி காலம் சென்ற டேவிட் துரைரத்தினம் வாட்ஸ்வத் பெண் (எர்தையா மகள்) தேவநேசம் வாட்ஸ்வத் என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தும் உடமைப் பொருட்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

டேவிட் துரைரத்தினம் வாட்ஸ்வத். கென்ஸ்மன் லேன், சாவகச்சேரி

மனுதார்.

இல: 230, தத்துவம்

எதிராக

எபநேசர் நேசராஜ் வாட்ஸ்வத், கென்ஸ்மன் லேன், சாவகச்சேரி.

எதிர்வாதி

மேற்படி வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்து திருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அப்பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுகின்றீர்.

1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,

ஆ. குணநாயகம்
(ஒப்பம்)
பதிவாளர்.

தயாரித்தவர்:
சு கந்தசாமி (ஜே பி.யு.எம்)
மனுதாரின் சட்டத்தரணி.
(1092)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி

### இணுவில் வி. ஜெயபாலன்

(சின்னராசா)

(முகாமையாளர், அஜந்தா ஹோட்டல், கொழும்பு)



மலர்வு:
08-01-1953

உதிர்வு:
19-09-1984

திதி:
08-10-1985

அன்பாலும், பண்பாலும், இனிய புன்னகையாலும் அனைவர் இதயத்திலும் நிறைந்த எங்கள் அன்புத் தெய்வமே! அகிலத்தைவிட்டு நீங்கள் மறைந்தது உண்மை. அன்பு நெஞ்சங்கள் உங்களை மறக்கவில்லை. அன்புருவான உங்கள் நினைவுச்சுடர் அணையாது எல்லோருக்கும் நல்லவராக, இனியவராக வாழ்ந்து இதயங்களை வென்றீர்கள், உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்;

அன்பு மனைவி: மதனரூபி. பிள்ளைகள்: ஜெயபானு ஜெயமதனு, ஜெயமலர், பெற்றோர், சகோதரர்கள், மாமன் மாமி, மச்சான்மார், மைத்துனி, மருமக்கள், நண்பர்கள், உறவினர்கள்.

''சாந்திவாசா'',
இணுவில் மேற்கு, இணுவில். (1035)

# 7 இஸ்ரேலிய உல்லாசப் பிரயாணிகள் சுட்டுக்கொலை

(கெய்ரோ)

எகிப்து பொலிஸ்காரர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏழு இஸ்ரேலிய உல்லாசப் பிரயாணிகள் நேற்று முன்தினமிரவு கொல்லப்பட்டனர்.

எகிப்தின் செமிடைல எல்லைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இஸ்ரேலிலிருந்து உல்லாசப் பயணம் மேற்கொண்டுவந்த பயணிகள் தமது கடைசி எல்லைத்தாண்டி எகிப்து கடல்பகுதியினுள் பிரவேசித்தபோதே எகிப்திய பொலிஸ்காரர் ஒருவர் தமது இயந்திரத் துப்பாக்கியால் அவர்கள் மீது சுட்டார்.

ஏழு இஸ்ரேலியர்கள் இச்சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர். ஒரு எகிப்திய இராணுவ அதிகாரியும் வேறுசில எகிப்தியர்களும் காயமடைந்தனர். எகிப்திய பொலிஸ்காரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## அணு ஆயுத அச்சுறுத்தலை தடுக்க——

# அமெரிக்காவின் திட்டம்

# திருப்தியாக அமையவில்லை

## ராஜீவ் கருத்து

புதுடில்லி அக். 7

"அமெரிக்காவினால் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டுள்ள எவ் 11 ரக போர் விமானங்கள் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக மட்டுமன்றி இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் சாத்தியக்கூறுகள் உள்ளன" என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அச்சம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியான வாரசஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் திரு. ராஜீவ் இதனைத் தெரிவித்தார்.

அணுவாயுத பரவலைத் தடுக்கப் பிராந்திய உடன்பாடு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் யோசனை தமக்குத் திருப்திகரமாக இல்லை என்றும்; இந்த யோசனை பாகிஸ்தான் அணுவாயுதம் பெறுவதற்குத் தடை விதிப்பதாக அமையவில்லை என்றும் கூறினார்.

இந்தியாவை இலக்காகக் கொண்டு அணுகுண்டு ஒன்றினை பாகிஸ்தான் தயாரித்து வருவதாகக் குற்றம் சுமத்திய ராஜீவ்காந்தி பாகிஸ்தானின் இந்த நடவடிக்கை குறித்த இந்தியாவுக்கு பூரண ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் கூறினார்.

பாகிஸ்தானின் இந்த அணு சக்தித் திட்டத்தினால் நிலைமை மோசமடைவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுவருவதாகக் கூறிய பிரதமர் ராஜீவ் தமது நாட்டுப் பந்தோபஸ்துக் குறித்துத் தாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளபோதும் இந்தியா அணுகுண்டு தயாரிக்கும் நடவடிக்கையில் இறங்கப் போவதில்லை என்றும் கூறினார்.

சீக்கியப் பயங்கரவாதிகளுக்குப் பாகிஸ்தான் உதவிபுரிந்து வருகின்றது என்பது வெறும் வதந்தியல்ல. இது குறித்துப் பாகிஸ்தானுக்கு தாம் அதிகார பூர்வமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார். (ரா)

உலகச் செய்திகள்

# ரயில்-பஸ் மோதல்: 22 பேர் பலி

(ஹொகட்டி)

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் இடம்பெற்ற ரயில் பஸ் விபத்தொன்றில் 22 பேர் பலியாகியுள்ளனர் 60 பேர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் 17 பேர் கொல்லப்பட்டதுடன் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்படுகையில் நால்வரும் மருத்துவமனையில் ஒருவரும் மரணமடைந்தனர். காயமடைந்த மேலும் ஐந்து பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதென்றும் அறிவிக்கப்பட்டது. (ரா)

## சீன-இந்திய எல்லைப் பிரச்னை:

# பேச்சு வார்த்தை மூலம்

# தீர்வு காண முடியும்

## சீன வெளியுறவு அமைச்சர் கருத்து

நியூயோர்க் அக். 7

சீன- இந்திய நாடுகளுக்கிடையிலான எல்லைப் பிரச்னைக் குறித்து நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஒன்றை தாம் எதிர்பார்ப்பதாக சீன வெளியுறவு அமைச்சர் வூல் செங் — பிங் கூறினார்.

இந்த எல்லைப் "பிரச்னைக் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் பீ ஆர் பகத்துடன் வூல்செங் ஐ. நாவில் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இதனைத் தொடர்ந்து அவர் செய்தியாளர் மகாநாட்டின் போதே இதனைக்கூறினார்.

இரு நாடுகளுக்குமிடையில் தற்போது இருந்து வரும் ஒரே ஒரு பிரச்னை எல்லை சம்பந்தப்பட்டதாகும்; இரு நாடுகளும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து கூட்டான ஒத்துழைப்பு முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் நிரந்தரமான ஒரு இந்நிலையை அடைய முடியும் எனவும் கூறினார்.

இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார உறவுகள்

(7ம் பக்கம் பார்க்க)

# '83 கலவரத்திலும் பார்க்க இம்முறை நிலைமை மோசம்!'

"யாழ்ப்பாணத்தில் அகதி முகாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிந்ததும். அநேகமானோர் இங்குவரத் தங்களை முல்லைத்தீவு முகாம்களில் பதிவு செய்துவருகிறார்கள்"

யாழ். அகதி முகாமிற்குச் சென்றபோது, முல்லைத்தீவிலிருந்து வந்த அகதிகள் இப்படித் தெரிவித்தனர்:

'யாழ். அகதி முகாம் கச்சேரி நல்லூர் வீதியில் 'தமிழ் மகளிர் அவை'யினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது ஒரு பெரிய பழைமையான வீடு. இந்த வீடு இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிரிக்கப்பட்ட ஒரு பகுதியில் அகதி முகாம் உள்ளது.

[9]

அகதிமுகாம் திறக்கப்பட்ட மறுதினம், அகதிகளைச் சந்தித்துக்கலந்துரையாடி பேட்டி காணச் சென்றிருந்தேன். முகாமில் ஐந்தாறு பெண்பிள்ளைகள் நின்றார்கள் அவர்களைப் பார்த்தால், அகதிகளாக தெரியவில்லை. சில சமயம், திருமலையிலிருந்து வந்த அகதிகளாக இருக்கலாம் என நினைத்துக்கொண்டு உள்ளே சென்றேன். அகதிமுகாம் பொறுப்பாளர் டாக்டர் ப. சசிதரனைச் சந்தித்தேன். அப்பெண் பிள்ளைகளை விசாரித்தபோது அவர்கள் தமிழ்மகளிர் அவை தொண்டர்கள் என்று தெரியவந்தது.

அகதிகளைப்பேட்டிகாண வந்திருப்பதாக தெரிவித்தேன், என்னுடன் வந்த படப்பிடிப்பாளர் 'தேவா'வும் அகதிகளை எட்டுப்பத்துப் படங்கள் பிடிப்பதற்கு தயாரானார்.

'அகதிகள் ஆயிரம்பேர் வந்தாலும் அத்தனை பேரையும் ஆதரிக்க காத்திருக்கிறோம்' என்று பொறுப்பாளர் டாக்டர் சசிதரன் தெரிவித்தார். இடவசதி இல்லையே என்று கேட்டபோது, பல்வேறு இடங்களிலும், கிளை முகாம்களை ஆரம்பித்து அங்கெல்லாம் அகதிகளை அனுப்பிவைப்போம்' என்றார்.

இம்முகாமிற்கு முதன் முதலில் வந்த ஒரேஒரு அகதி ப. செல்வமதி; (வயது 28; இவர் உப்புவெளியைச் சேர்ந்தவர். இவரது கணவன் பாஸ்கரன், திருமலையில் சைக்கிள் கடை வைத்திருக்கிறார் இவருக்கு நான்கு பிள்ளைகள்; மூன்று பிள்ளைகள் மட்டும் இவருடன் இருக்கிறார்கள். மற்றொரு பிள்ளை தந்தையுடன் திருமலையில்

'என்ன நடந்தது?' என்று கேட்டேன்.

"கடந்த மாதம் முற்பகுதியில் ஒரு கோஷ்டியினர் வந்து தாக்குதல் நடத்தினார்கள்?"

"எங்கே?"

"எங்கள் பகுதியிலும், சுற்றுவட்டிலும் நான்கு பிள்ளைகளுடன் வீட்டிலிருந்து புறப்பட்டு, சம்பல்தீவுக்குச் சென்றோம்"

"ஏன் அங்கு சென்றீர்கள்?"

"83 கலவரத்திலும் சாம்பல்தீவுக்குப் போயிருந்தோம். பின் நிலைமை சீரானதும், மீண்டும் உப்புவெளிக்குப் போனோம் 83 கலவரத்திலும் பார்க்க இம்முறை நிலைமை மோசமாக இருந்தது"

"என்ன செய்தார்கள்?"

"நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளை எரித்தார்கள். பலரைத் தாக்கினார்கள், தினமும் இப்படி நடந்தது

# வடக்கு நோக்கி வரும் திருமலை அகதிகள்

– கா. யோகநாதன் –

அறைவாசலைப் பார்த்துக்கொண்டிருந்தோம். ஒருபெண் மட்டும் கைக்குழந்தையுடன் வந்துகொண்டிருந்தார் ஒரே ஒரு அகதி மட்டும்தான் இருப்பதாக கூறினார்கள்.

தங்குவதற்கு பெரும் மண்டபம், உதவிசெய்ய பல தொண்டர்கள் மூலையிலே உணவுப் பண்டங்கள் ஆனால் நான் கண்டது ஒரேஒரு அகதியைத்தான்.

'நேற்றுத்தான் ஆரம்பித்தோம்; நாளைக்கு பலர் வருவார்கள்' என தொண்டர்கள் தெரிவித்தனர்

நாங்கள் முகாமைவிட்டுப் புறப்பட்டோம். அன்றிரவு 8 மணிக்கு முல்லைத்தீவிலிருந்து ஒரு பஸ்ஸில் 85 அகதிகள் முகாமிற்கு வந்தனர்

யாழ் பஸ் நிலையத்திற்கு வந்து சேர்ந்த அவர்களை, சிலர் 'யாழ் அகதி முகாமிற்கு' அனுப்பி வைத்திருந்தனர்.

மறுநாள் அகதி முகாம் சென்றபோது. விருந்தை ஹோல், அறைகள், படிப்படி எங்கும், அகதிகள், மூட்டை முடிச்சுகள், பெட்டி, பார்சல்களுடன் நிறைந்து வழிந்து காணப்பட்டனர். அகதிமுகாம் பொறுப்பாளர் ஒரு டாக்டராக இருப்பதால் அங்கு சுகாதாரத்திற்கு குறைவிருக்காது முகாமில் மற்றொரு மலகூடம் கட்டும் வேலை நடந்துகொண்டிருந்தது. அதே சமயம், குழாய் மூலம் குடிநீர் பெறுவதற்கும் ஏற்பாடுகள் நடந்தது. சுற்றுடல் சுத்தம் செய்யப்படுகிறது; சுகாதாரம் பேணப்படுகிறது.

"கணவர் ஏன் வரவில்லை" என கேட்டேன்

"அவர் ரவுணில் இருந்தவர். அங்கிருந்து வீட்டிற்கு வர இயலாது"

"அவர் என்ன வேலை?"

"சயிக்கிள் கடை வைத்திருக்கிறார் நாங்கள் பிள்ளைகளுடன் சாம்பல்தீவிலிருந்து வந்தோம்"

"உப்புவெளியிலா சாம்பல்தீவிலா?"

"உப்புவெளியில் இருந்து சாம்பல்தீவுக்கு போனோம் பின் மட்டக்களப்புக்குப் போனோம்"

"உப்புவெளியில் என்ன நடந்தது?"

"வீடெல்லாம் எரித்தார்கள்"

"எத்தனை வீடு"

"அங்கிருந்த வீடுகளெல்லாம் நூற்றுக்கும் அதிகமான வீடுகள் இருக்கும் வந்து எல்லா இடங்களும் தாக்கினார்கள்"

"உங்கள் கணவர் பற்றி தகவல் கிடைத்ததா?"

"அவர் அங்கே என்னமாதிரியென்று தெரியவில்லை"

"கணவரோடு போகவில்லையா?"

"இல்லை போகவில்லை"

"பிள்ளைகள் போகவில்லையா?"

"ஒரு பிள்ளை போனது அது தப்பிவந்து திரும்பிவரவில்லை"

"அவர் இல்லாமலா தான் வெளிக்கிட்டீர்கள்?"

"அவர் இல்லாமல்தான் வெளிக்கிட்டோம் பின் மட்டக்களப்பு போனோம்"

(7ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

எல்லா மக்களையும் சில நாளைக்கும், சில மக்களை எல்லா நாளைக்கும் முட்டாளாக்க முடியும்; ஆனால் எல்லோரையும் எல்லா நாளைக்கும் முட்டாளாக்க முடியாது.

— ஆபிரகாம் லிங்கன்

# நமது நோக்கு

## மந்திரி காமினியும் வந்தே மாதரமும்

“மலையகத்தில் கிரிக்கெட் பயிற்சி நிலையங்களும் ஆரம்பிக்கப்படும்” என்று மந்திரி காமினி அண்மையில் நடந்த தோட்டத் தொழிலாளர் கருத்தரங்கில் வாக்குறுதி அளித்திருக்கிறார்.

இத்துறையில் இலங்கை நிகழ்த்திய சாதனைக்குப் பெரும் பாராட்டுப் பெற்ற அமைச்சர் காமினி வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் 150 வருடத்துக்கு முன் தென்னிந்தியத் திராவிடர்களை தேயிலைத் தோட்டத்துக்கு கொண்டுவந்த வரலாற்றை பிரஸ்தாபித்திருக்கிறார்.

தென்னிந்திய திராவிடர் பற்றி தவறான கருத்துக்கள் இந்த நாட்டில் மட்டுமல்ல வேறு பல இடங்களிலும் உண்டு.

வறுமையும் இந்தியத் திறனும் ஒருங்கு சேர்ந்த ஒரு கூட்டம் வேறெங்கும் உலகளாவிய சாதனைகளில் வெற்றி பெற்றதை நாமறிவோம்.

கடந்த டெஸ்ட் கிரிக்கெட்டில் திராவிடம் செயற்பட்டவிதம் 'கிரிக்கெட்' மந்திரிக்கு உற்சாகம் அளித்திருக்கலாம்

எனவேதான் ஒன்றுபட்ட இலங்கையை உருவாக்கும் ஞானமும் ஆற்றலும் கொண்ட ஆட்சி, உலகிலே முதலிடம் வகிக்கும் அகில இலங்கை கிரிக்கெட் கோஷ்டியைக் கட்டி எழுப்ப முடியும்

வெள்ளையர் ஆட்சியில் தோட்டத் தொழிலாளர் இருந்த அடிமை நிலை மாறி இன்று திறந்தவர் ஆட்சியில் பல உரிமைகள் சலுகைகள் பெற்றது அமைச்சர் கூறியதுபோல முற்றும் உண்மை.

ஒரு சுதந்திர நாட்டில் சுதந்திரப்பிரஜைகளுக்குரிய சிறப்பு தோட்டத் தொழிலாளருக்கு மட்டுமல்ல, நாட்டில் வறுமையால் வாடும் லட்சக்கணக்கான மக்களுக்கு இன்னும் கிட்டவில்லை.

இதனை அறியவேண்டிய பொறுப்புடைய அமைச்சர்களில் காணி அமைச்சரே முன்நிற்கின்றார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் குடியேற்றத் திட்டங்களில் அமர்த்தப்படும் போது, அன்றும் இன்றும் நாம் இனரீதியில் பாகுபாடு காட்டப்பட்டதையே கண்டித்து போர்க்கொடி உயர்த்தினோம்.

இனவாரிய பொருளாதாரக் கொள்கையில் வறுமை மக்களின் இனத்தைக் குலத்தைப் பொறுத்திருக்கவில்லை.

குடியேற்றத் திட்டங்களின் பெருநோக்கம் என்ன? ஏழை மக்களை நாட்டின் சமூகத்திலிருந்து அப்புறப்படுத்தி அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு உரிய திட்டங்களைச் செயற்படுத்தி உயிர்வாழ உதவுவதே.

சமூகத்தில் சமத்துவ வாழ்வை அவர்கள் எட்டிப் பார்க்கக்கூடிய நிலை இந்த குடியேற்றத் திட்டங்களின் முக்கிய அம்சமாகக் கொள்ளப்படவில்லை.

அந்த அடிப்படையில் தோட்டத் தொழிலாளர் கிரிக்கட் விளையாடலாம். ஆனால் இன்று கிரிக்கட் விளையாடும் உரிமை கொண்ட செல்வச் சமுதாயத்துக்கும் தோட்டத் தொழிலாளரின் துன்ப வாழ்வுக்கும் எட்டாம் பொருத்தமென்பதை அறியாதவரும் உண்டா? அறியாதவர்களே 'வந்தே மாதரம்' என்ற திவ்விய மந்திரத்தின் தாற்பரியத்தை புரியமுடியாதவர்.

வறுமையிற்செம்மையாக வாழும் கலை திராவிடரின் தனிக்கலை; ஆனால் வறுமையை நீக்கி நல்வாழ்வுக்கு வழிகாட்டுவதில் பெருந்தவறை போடுவதே இன்றைய ஆட்சி கடைப்பிடிக்கும் பெருஞ்சூழ்ச்சி.

விரைவில் தோட்டத் தொழிலாளருக்கு பிரஜாவுரிமைபெற்ற பெருங்கொடை மட்டுமல்ல, சம்பள உயர்ச்சி, உயர்கல்வி உட்பட கல்வி வசதிகள் பெருமளவிற்கு வாக்குறுதிகளாகப் பதியப்பட்டிருக்கின்றன.

தோட்டத் தொழிலாளர்களின் பெருந்தலைவர் அமைச்சர் தொண்டமானின் செல்வாக்கால் இவ்வித முன்னேற்றத்துக்கு வழிவகுக்கப்பட்டது. ஆனால் பல சலுகைகள் ஜனாதிபதியின் (ஐ. ஒ. யு) நோட்டுகளாகவே இருக்கின்றன.

சர்வவல்லமை பொருந்திய ஜனாதிபதியே நிர்வாக ரீதியில் இவற்றைச் செயற்படுத்துவதில் தடங்கல் தவிர்க்கமுடியாத நிலையாக இருக்கின்றது.

அச்சங்கள் அனைத்தையும் அகற்றுவதற்கு தடையாக இருப்பது அச்சமே என்றார் காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி எவ். டி. ரூஸ்வெல்ட்.

நாட்டின் நடுவில் திராவிட ஆட்சிக்கு இடமளிக்கலாமா? என்ற கோஷம் திராவிட அச்சத்தில் உருவான மயக்கம்.

புகுந்த நாட்டுக்கு வந்தே மாதரம் சொல்லி மிருகங்களிலும் மோசமாக உழைக்கும் மலையகமக்கள் பெருக்கிய செல்வத்தைப் பகிர்ந்தளிப்பதில் ஏன் இந்த அநீதி?

அரசு கடைப்பிடிக்கும் முதலாளித்துவம் இந்தப் பங்கீட்டுக்குமறுப்பாயிருக்க வேண்டியதில்லை; சோஷலிசம் என்ற வாய் வேதாந்தம் இந்த சமத்துவ பங்கீட்டை நிறைவேற்றமாட்டாது.

தொழிலாளிகள் திறம்பட உழைத்து நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதும் ஆட்சியாளர் அதற்கேற்ற முறையில் செல்வத்தைப் பகிர்ந்திடுவதில் சமத்துவம் கடைப்பிடிப்பதுமே மிக முக்கியம்; இவ்விதமித வாதம்-நடு ரோட்டு சோஷலிசம் இலகுவானதல்ல.

ஆனால் எண்பதினாயிரம் பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை எப்படியோ வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

இதற்குண்டான தடை இன்று நாட்டின் வீழ்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமென்பதை காணி- கிரிக்கெட் அமைச்சர் நினைவிற்கொள்வது நலம்.

# இலங்கைத் தமிழரும் பஞ்சாப் சீக்கியரும்

பஞ்சாப் மாநிலத்தில் 25-9-85 ல் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் சீக்கியர்களின் கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் திரு. ராஜீவ் காந்தியின், இந்திரா காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளது. “தனது கட்சிக்குத் தோல்வியேயெனினும் இந்தத் தேர்தல் ஜனநாயகத்திற்குக் கிடைத்துள்ள ஒரு சிறந்த வெற்றியாகும்” என்று ராஜீவ் காந்தி கூறியுள்ளார். அதே சமயத்தில் ஜனநாயகம் எவ்விதம் பஞ்சாப் மாநிலத்தில் வெற்றிபெற்றுள்ளதென்பதையும் திரு. ராஜீவ் காந்தி இலங்கைத் தலைவர்களைக் கவனிக்கும்படி கேட்டுள்ளார்.

இந்தியாவிலுள்ள சீக்கியரும், இலங்கையிலுள்ள தமிழர்களுமாகிய இத்தேசியச் சிறுபான்மையினர் எவ்விதம் நடந்துள்ளனர் நடத்தப்பட்டுள்ளனர் என்பதனை ஒப்பு நோக்குவோம்.

(1) ஏனைய மாநில அரசுகள் போல் பஞ்சாப் மாநிலத்திலும் வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு போன்றவை தவிர்ந்த ஏனைய மாநில நிர்வாகம் முழுவதும் தன்னகத்தே கொண்ட மாநில சட்டசபை உருவாகுவதற்கு வழியேற்பட்டுள்ளது. இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேசங்களையே தம் தாயகங்களாகக் கொண்டு விளங்குகின்றனர். இத்தகைய ஈழத் தமிழர்கள் கடந்த 30 ஆண்டுகளாகத் தங்களைத் தாங்களே பரிபாலனம் செய்யத்தக்க முறையில் மாநில ஆட்சி அமைப்பினை உருவாக்க சிங்கள அரசைக் கேட்டு வந்திருக்கின்றனர். இம்மாநில அரசின் கீழ் நிலப் பங்கீடு, கல்வி, சுகாதாரம் சம்பந்தமான துறைகளை இம்மாநில அரசு உள்ளடக்கியதாக இருத்தல்வேண்டும்.

கடந்த 30 ஆண்டுகளாகக் காலத்துக்குக் காலம் அரசைக் கைப்பற்றிய சிங்கள அரசாங்கங்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையே ஒப்பந்தங்கள் ஏற்பட்டன ஆனால் இவை ஒன்றும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

(2) சீக்கியர்களின் தனியரசு உருவாக்கும் நிலையில் இந்திய உபகண்டத்திலிருந்து பிரிந்து வாழ இந்திய அரசிடம் உரிமை கேட்டனர். காலிஸ்தான் பெருமளவு தீவிரவாத சீக்கியர்களை இக்கோரிக்கைக்கு உட்படுத்தினர். அமிர்தசரஸில் உள்ள பொற்கோயில் மிகப்பெரிய வழிபாட்டுத் தலமாயிருந்தும் அது சீக்கியரினால் ஆயுத பாசறையாக்கப்பட்டது இந்திய அரசு தம் இராணுவத்தைக் கொண்டு பொற்கோயிலில் இருந்த தீவிரவாதிகளை அப்புறப்படுத்த முனைந்ததால் சீக்கியர்களின் பகைமையைக் காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தேடிக்கொண்டார்.

ஆனால் ஈழத்தமிழ் தீவிரவாதிகளோ ஆயுதந்தாங்கி போராடியபோதும் இலங்கையின் எந்தத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மீதும் வன்செயல் புரியவில்லை, 1983ம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த இனக்கலவரத்தில் எண்ணற்ற தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்களின் வீடுகள் எரிக்கப்பட்டதுமல்லாமல் பொருட்களும் சூறையாடப்பட்டன சிறையிலிருந்த தீவிரவாதிகள் சிறையிலேயே படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் தமிழ்த் தீவிரவாத இளைஞர்கள் தம் தாயகத்திற்கு (வட, கிழ் மாகாணங்கள் உள்ளும், புறமும் சிங்களக் குடிமக்களைக் கொன்றவர்களல்லர் சிங்களக் குடிமக்கள் மீது தாக்குதல் ஆரம்பித்தது எப்போதெனில் சிங்கள ராணுவம் அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்கத்தொடங்கி எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பாகும் எனவே சீக்கியரது செயற்பாட்டுக்கும் ஈழத் தமிழ்த் தீவிரவாதிகள் செயற்பாட்டுக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு

(3) மிக நம்பிக்கையான ஓர் சீக்கிய மெய்ப்பாதுகாவலனால் ஓர் இந்து மதத்தைச் சார்ந்த காலஞ்சென்ற பிரதமர் திருமதி இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டதும் சீற்றம் கொண்ட இந்து சமுதாயம் டில்லியிலிருந்த சீக்கியர்களைப் பலமாகத் தாக்கியது ஆனால் கொல்லப்பட்ட பிரதமரின் மகன் திரு. ராஜீவ் காந்தி புதிய பிரதமராகப் பதவியேற்றதும் தாய் இறந்த மறுநாளே டில்லி சென்று 'சீக்கியர்களைத் தாக்கும் கிளர்ச்சி உடனடியாக நிறுத்தப்படவேண்டும்” என்று கூறியும் சீக்கியர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கமாக அவர்கள் தாக்கப்பட்டதற்கு ஓர் நீதிவிசாரணைக்கும் உத்தரவிட்டார். ஆனால் இலங்கையிலோ 1983ம் ஆண்டு ஆடி மாத இனக்கலவரம் தொடங்கியதும் ஒரு கிழமையாக அதன் உச்சக்கட்டம்வரையும் செல்லவிடப்பட்ட பின்தான் ஜனாதிபதி அமைதிப்படுத்தினார். இன்றுவரையும் நீதிவிசாரணைக்கு உத்தரவிடப்படவில்லை. மிகப்பாதுகாப்பான அரசு மறியலில் இருந்த 52 தமிழ்த்தீவிரவாத இளைஞர்கள் கொல்லப்பட்டதைப் பற்றியே ஒரு விசாரணையும் இல்லை.

[4] இந்தியப் பிரதமர் பஞ்சாப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் சீக்கியரின் பிரதம கட்சியாகிய அகாலிதளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும்போது, சீக்கியர்கள் தங்கள் அயல் மாநிலங்களுடன் தண்ணீர் சம்பந்தமாகப் பங்கு கொள்ளக் கூடியதாயிருந்தும் அக்கோரிக்கை உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்தனர். சீக்கியர்கள் பிரிவினை கோரவில்லை. மிக நீண்டவிவாதங்களின் பின் ஒப்பந்தமேற்

(5-ம் பக்கம் பார்க்க)

— டாக்டர் ஆர். டபிள்யு சி. தம்பையா —

## மக்கள் கருத்து

## இவ்வருட நவராத்திரி

நிகழும் குரோதன ஆண்டின் நவராத்திரி நாட்கள் தொடர்பாக வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் ஆகிய இரண்டும் வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளன. புரட்டாதி 28 ஆம் திகதியே நவராத்திரி தொடங்குவதாக ஒப்புக் கொள்ளும் இவ்விரு பஞ்சாங்கங்களும் மஹாநவமி, விஜயதசமி என்பன தொடர்பான முடிவுகளில் வேறுபட்டுள்ளன. வாக்கிய பஞ்சாங்கத்தின்படி மஹா நவமியாகிய சரஸ்வதி பூஜை இறுதி நாள் ஐப்பசி 6 ஆம் திகதியாகும்; விஜயதசமி ஐப்பசி 7 ஆம் திகதியாகும். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி மஹா நவமி ஐப்பசி 5 ஆம் திகதியும் விஜயதசமி ஐப்பசி 6 ஆம் திகதியும் அமைகின்றன: ஆஸ்திகப் பெருமக்களுக்கு குழப்பம் விளைக்கும் இப்பிரச்சினை தொடர்பாக இலங்கைச் சோதிட ஆய்வுமன்றம் கவனம் செலுத்தித் தனது முடிவை முன்வைத்துள்ளது.

15-9-85 அன்று மாவிட்டபுர ஆதீனத்தில் நிகழ்ந்த "சமய அனுட்டானங்களும் பஞ்சாங்கங்களும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கிலே இவ் விடயம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

விஜயதசமிக்கு சாயான்ன வியாபகம் அதாவது நட்சத்திரங்கள் தோற்ற ஆரம்பிக்கும் போது தசமி வியாபித்திருத்தல் மிகவும் அவசியமானதாகும். வாக்கிய பஞ்சாங்கத்தின்படி ஐப்பசி ஏழாம் திகதி மாலை 5 மணி 45 நிமிடம் வரை தசமி வியாபித்துள்ளது. எனவே அப் பஞ்சாங்கம் விஜயதசமியை ஐப்பசி ஏழாம் திகதிக்குரியதாகக் கொள்கிறது. ஆயின் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஐப்பசி ஏழாம் திகதி பகல் 1 மணி 45 நிமிடத்துடன் தசமி அற்றுப் போய் விடுகிறது; எனவே அப் பஞ்சாங்கம் முதல் நாளாகிய ஐப்பசி ஆறாம் திகதியை விஜயதசமி நாளாகக் கொள்கிறது;

சோதிடத்திற்கும் சமய அனுட்டானங்கட்கும் கால நிர்ணயம் மிகவும் அடிப்படையானதாகும். கால நிர்ணயத்திற்கு வாக்கிய முறைமையை விடத் திருக்கணித முறைமையே கணித சுத்தமான அறிவியலுக்கு இயைந்தமுறைமையாகும்; எனவே திருக்கணித பஞ்சாங்க முறைப்படியிலான நவராத்திரிக்கணிப்பே பொருத்தமானதாகக் கொள்ளப்படத்தக்கதென்றும் அதன்படி ஐப்பசி ஐந்தாம் திகதி மஹாநவமியாகிய சரஸ்வதி பூஜை இறுதிநாள் எனவும். ஐப்பசி ஆறாம் திகதி விஜயதசமி எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது இதன்படி முதல் ஆறு நாட்களும் முறையே துர்க்கைக்கும், லக்ஷ்மிக்கும் அமைந்துவிட இறுதி இருநாட்களே (ஐப்பசி 4 5) சரஸ்வதிக்கு உரியனவாகும். இவ்விருநாட்களிலேயே சரஸ்வதியின் மூன்று நாட்களுக்குமுரிய பூஜைகள் நிகழ்த்தப்படவேண்டும்.

சு. நடராசா
செயலாளர்

நா சுப்பிரமணிய ஐயர்
தலைவர்

இலங்கை சோதிட
ஆய்வு மன்றம்;

## இலங்கைக்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு தலைநகரமும் வழங்கப் பட்டது. அத்துடன் இலங்கை யின் வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் உள்ள தமிழர்க ளது இனப்பிரச்சினை சம்பந்த மாக எத்தகைய ஓர் நியாய மான அரசை நிறுவ வேண்டு மென்று கடந்த 8 வருடகால மாக ஒரு முடிவு மேற்பட முடியவில்லை.

(5) பஞ்சாப் மாநிலத்தில் பெருமளவு இந்துக்கள் வாழ்ந் தாலும் சீக்கியர்களுடன் ஏற் பட்ட உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இந்தியப் பிரதமர் பஞ்சாப் மாநிலத்தில் தேர்தலுக்கு உத்தரவிட்டார். அங்கு தேர்தல் நடாத்துவதற்கு திரு. ராஜீவ் காந்தி இந்திய மக்களனைவரதும் அபிப்பிரா யத்தை வேண்டி நிற்கவில்லை. பஞ்சாப் மாநில மக்கள் தங் களைத் தாங்களே ஆளும் சுய நிர்ணய உரிமை கொண்டவர் களாதலால் தேர்தல் பற்றி அவர்களே தீர்மானிக்கவேண் டியவர்கள் ஏனையவர்களல்லர். இலங்கையிலோ வடக்கு கிழக்கு மாகாணங்களில் எத் தகைய நிர்வாகத்தை ஏற் படுத்திக் கொள்ளவேண்டு மென்பதை ஏனைய மாகாணங்கள் அங்கீகரிக்க வேண்டுமென அரசு கூறுவ தால் அப்பகுதி மக்களுக்குரிய ஜனநாயக உரிமை மறைமுக மாக மறுக்கப்படுகின்றதுமல் லாமல் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப்பறிப் பதாக அமைகின்றது.

(6) அண்மையில் நடை பெற்ற பஞ்சாப் மாநில சட்டசபைத் தேர்தலில் ராஜீவ் காந்தியின் ஆதரவா ளர்களாக இருந்த இந்துக்கள் பஞ்சாப் மாநிலத்தில் ஓர் அமைதியான அரசை நிறுவும் நோக்கத்துடன் சீக்கியரின் அகாலிதள் கட்சிக்கு வாக்க ளித்துள்ளார்கள். இலங்கையி லோ அண்மையில் நடைபெற்று முடிந்த 'முல்கிரிகல' இடைத் தேர்தலில் இலங்கையின் இரு பெரும் சிங்கள அரசியல் கட்சி களில் யாரால் தமிழ்த் தீவிர வாதிகளின் நடவடிக்கைகளை விரைவாக ஒழித்துக்கட்ட முடியுமென்பதே முக்கிய பிரச் சாரமாக இருந்தது.

பஞ்சாப் மாநில இடைத் தேர்தலின்பின் அங்கு வாழும் சீக்கியரும், முஸ்லிம்களும், இந்துக்களும் ஒன்று சேர்ந்து பிளவுபட்ட மாநிலத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

திரு ராஜீவ் காந்தி ஜன நாயகத்தை நேசிப்பதுடன் தாய்நாட்டில் அளப்பரிய மதிப்பும் கொண்டவராத லால் தன்கட்சி தோல்வி கண்டதாலும் ஜனநாய கம் அங்கு வெற்றியடைந் தமையால் மிக மகிழ்ச்சி கொண்டுள்ளார். ஈழத் தமி ழர் பிரச்சினையிலும் பார்க்க மிகவும் சிக்கல் நிறைந்த பஞ் சாப் இனப் பிரச்சினையை திரு. ராஜீவ் காந்தி எவ்விதம் தீர்த் துளளார் என அவர் இலங்கை அரசியல் தலைவர்களை நோக் கும்படி கேட்டுள்ளார்.

## மதுபான விற்பனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் குடிபான வகைகளை அணக்கெடுத்துக்கொண்டு பூட் டித் திறப்புக்களை தரும்படியும் கேட்டு வாங்கிச்சென்றனராம்.

விற்பனை நிலைய உரிமையா ளர்கள் ''நீங்கள் யார்? ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்?'' எனக்கேட்டபோது தாங்கள் இயக்கத்தைச் சேர்ந்த தவர்களென கூறிய அவர்கள், இதுதொடர்பாக கதைப்ப தற்கு குறித்த ஓர் இடத்தில் சந்திக்கும்படி கூறிச்சென்ற தாக தெரிவிக்கப்பட்டது.

(ச)

முதலாவது

### பிறந்த நாள் வாழ்த்து



ஷர்மிஷஹிலாட்மன்

''தாயின் உதர விடமும் தந்தையின் பின் பிண்டியும் மழ லைச் செல்வமே''

வவுனியா இறம்பைக் குளத்தைச் சேர்ந்த எட்மசராணி தம்பதி களின் செல்வப்புதல்வி ஷர்மி ஷஹிலா இன்று (8-10-85) தனது முதலாவது பிறந்தநாளை தனதில்லத்தில் குதூகலமாக கொண்டாடுகிறாள். இவளை அப்பா, அம்மா, அக்காமார் நிம்மி ஷரீன, தர்மி ஷரு ா, தொரெ ஷஹீரா தொட்டப்பா தொட்டம்மா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் தகைமை பல பெற்ற தமிழ்மரபுடன் தலைசிறந்து நீடூழி வாழ்கவென நம்மன புடன் வாழ்த்துகிறார் கள். 1106

## கிளிநொச்சி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையத்தை அண் மிய அரச அலுவலகங்கள், நகரப்பாடசாலைகள் நூற்றுக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் இயங்க முடியாத நிலையில் ஸ்தம்பித மடைந்துள்ளன.

இ. போ. ச பஸ் வண்டி கள் மினிபஸ்கள், மற்றும் வாகனங்கள் பழைய பஸ் நிலை யத்தில் இருந்தே யாழ். செல் கின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேலும் ஒருவர் பலியானதை யடுத்து மரணமானார். இவரது சடலமும் அம்பத்திரிச்சவச் சாலையில் சேர்க்கப்பட்டுள் ளது.

## லொறியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இனந்தெரியாத 4 நபர்கள் தடுத்துநிறுத்தி கடத்திச் சென்று தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டு பின்னர் வேப்பர் சுட்டுவிடுக்க லொறியைக் கைவிட்டுவிட்டனராம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 'வி. எம். எஸ்' லொறியில் இருந்த பொருட்களே கொள்ளை அடிக்கப்பட்டனவாம்.

இதேவேளை மேற்படி லொறி யில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை திரும்பவும் தந் துதவுமாறு வி. எம். எஸ் லொறி உரிமையாளர்கள் சம் பந்தப்பட்டவர்களிடம் கோரிக் கை விடுத்துள்ளனர். இப் பொருட்கள் பல பொதுமக்க ளுக்குச் சொந்தமானவை யென்றும் அவர்களுக்குச் கொழும்பிலிருந்து யாழ்ப் பாணம் கொண்டு வந்துகொடுக் கும் சேவையைத் தாம் செய்து வந்துள்ளதாகவும், இதனால் இப்பொருட்களை உரியவர்களிடம் திரும்பவும் ஒப்படைப்பதற்காக அவர் பொருட்களை தந்துதவுமாறு கேட்டுள்ளனர்.

இவ்வாறான கொள்ளைகளி னால் தாம் இச் சேவையைத் தொடர்ந்து செய்யமுடியாதி ருப்பதாகவும் அவர்கள் தெரி வித்தனர். (ஈ)

## பிதா சிங்கராயர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதிரான வழக்கின் நேற்று சாட்சியமளிக்கையில் தெரிவித் தார்.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எச் டபிள்யூ சேனநாயக்கா முன்னிலையில் அவசரகாலச் சட் டத்தின் கீழ் நடைபெற்று வரு கிறது.

எதிரி தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு பாலா தம்பு சாட்சியை நெறிப் படுத்தினார்.

சாட்சி தொடர்ந்து சாட்சிய மளிக்கையில் கூறியதாவது:-

''நான் மருத்துவத் துறை யில் எம். பி பி எஸ். பட்டம் பெற்றுள்ளேன் வைத்தியத் துறையில் 26 வருடங்கள் சேவைசெய்து வருகிறேன். இரண்டு ஆண்டுகளைத் தவிர ஏனைய காலமெல்லாம் யாழ்ப் பாணத்தில்தான் கடமை யாற்றியுள்ளேன்: தற்போது தனியார் மருத்துவமனை ஒன்று நடத்திவரும் எனக்கு வண சிங்கராயரை நீண்ட காலமா கத் தெரியும்: நான் அவரின் குடும்பவைத்தியர். அவருக்குப் பல சமயங்களில் சிகிச்சையும் செய்துள்ளேன். 1982ம் ஆண்டு நவம்பர் - டிசம்பர் மாதங் களில் பிதா சிங்கராயர் இரா ணுவத்தினரால் கைதுசெய்யப் பட்டதாக அறிந்தேன்.

''1983ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி குருநகர் இராணுவ முகாமில் அவரைச் சென்று பார்த்தேன். மேஜர் குலதுங்காவிடம் அங்கு வருவ தற்கான முன்னேற்பாடுகளைச் செய்த பின்னரே அங்கு சென் றேன். மேஜர் குலதுங்காவின் அறையில் பிதா சிங்கராயரைச் சந்தித்தேன். மேஜர் குல துங்கா முன்னிலையில் அவர் கதைப்பதற்குத் தயங்கினார்: அவர் மிகுந்த கவலையுடனிருந் தார். தான் மிகவும் களைப் படைந்த நிலையில் இருப்பதாக வும், தனக்குக் கண் பார்வை குறைந்துவருவதாகவும் தெரி வித்தார். தமக்கு வாசிப்புச் சக்தி குறைந்து வருவதாகவும் அவர் என்னிடம் தெரிவித் தார்.

''மருத்துவ பரிசோதனை செய்யும்படியும், அதற்காக எனது கிளினிக்குக்கு வரும்படி யும் அவரிடம் கூறினேன் டிசம் பர் 27ம் திகதி பிதா சிங்கரா யர் எனது மருத்துவ மனைக்கு இராணுவப் பாதுகாப்புடன் வந்தார். இரண்டு இராணுவத் தினர் அவரைக் கூட்டிவந்த தனர். அவர் என்னுடன் அதி கம் கதைக்கவில்லை மருத்து வப் பரிசோதனை செய்யுமாறு என்னிடம் கூறினார். எனது மருத்துவமனைக் கட்டடத்தைச் சுற்றி இராணுவத்தினர் துப் பாக்கிகளுடன் நின்றிருந்தனர்.

''எக்ஸ்ரே எடுக்கும்படியும், நுண்ணிய இருதய வரைபடம் எடுக்கும்படியும், சிறுநீரகப் பரிசோதனை செய்துகொள்ளு மாறும் அவரிடம் கூறினேன். யாழ். பெரியாஸ்பத்திரிக்குச் சென்று கண் நிபுணர் ஒருவ ரிடம் காட்டும்படியும் கூறி னேன்.

''அன்றைய தினம் பிற்பகல் இராணுவத்தினர் எனது வீட் டுக்கு வந்து அவர்பற்றிய மருத் துவ அறிக்கையை என்னிடம் சமர்ப்பித்தனர். அதற்கான சிகிச்சையை நான் எழுதிக் கொடுத்தேன்:

''லாகுடில்' என்ற மருந்து பற்றி எனக்கு நன்கு தெரியும், மனநோயால் பாதிக்கப்பட்டவர் களுக்கு அது கொடுக்கப்படு வது இதேபோன்று 'தொப்ர னில்' என்ற மருந்தும் மனோ வியாதியால் பாதிக்கப்பட்ட வர்களுக்குக் கொடுக்கப்படுவது என்றும்.''

## கண்காணிப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்ததாக இந்த வட்டாரங் கள் தெரிவித்தன:

சிறைச்சாலைகளின் நிலைமை யைப் பரிசீலிக்கவும், போர் நிறுத்தம் பற்றி அறிக்கைகள் தாக்கல் செய்யவும், அகதி களுக்குப் புனர்வாழ்வு அளிக் கும் நடவடிக்கைகளைப் பரிந் துரை செய்யவும் இக்கண் காணிப்புக் குழுவிற்கு அதி காரம் அளிக்க வேண்டும் என்ற யோசனையை இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர் ஜெய வர்த்தன ஏற்றுக்கொண்டுள் ளார் என்றும் இந்த வட்டா ரங்கள் கூறின.

### பார்த்தசாரதி கூட்டணி சந்திப்பு

வெளியுறவுத்துறை கொள் கைத் திட்டமிடல் குழுவின் தலைவர் திரு. ஜி. பார்த்த சாரதியை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் நேற்று முன்தினமும் நேற்றும் டில்லியில் சந்தித்து பேச்சுகள் நடத்தினர்.

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும், நகல் செயல்திட்டம், மற்றும் போர் நிறுத்த ஏற்பாடு பயனுள்ள வகையில் அமுலாக்குவதற் கான வழிமுறைகள் குறித் தும் இப்பேச்சுகளில் விவா திக்கப்பட்டது.

### 'லலித்' கருத்து

(கொழும்பு)

''போர் நிறுத்தத்தை அர சாங்கம் ஒருதலைப்பட்சமான முறையில் பிரகடனம் செய் துள்ளது. நாம் அஹிம்சைவழி யில் இனப்பிரச்சினைக்கு நிரந் தரத்தீர்வைக் காண்பதற்காக பேச்சுக்களை நடத்தி வருகின் றோம்'' என்று தேசிய பந்தோ பஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தெரிவித்துள் ளார்.

இரத்மலானையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெளத்த மகாவைபவத்தில் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கலந்து கொண்டு உரை யாற்றுகையில், ''புதுடில்லி நடைபெற்று வரும் பேச்சுக் கள் மூலம் நாட்டின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர் வைக் காணமுடியும் என்று அரசாங்கம் நம்புகின்றது. பல்லாயிரக்கணக்கான பொது மக்களின் உயிரை பாதுகாப்பது மட்டுமல்ல தீவிரவாதிகளின் தாக்குதல்களால் குடிபெயர்ந் துள்ள மக்களை மீண்டும் குடி யமர்த்த இத்தீர்வு உதவும்'' என்றும் தெரிவித்தார்.

### அலிஸ் கருத்து

(கொழும்பு)

''யுத்த நிறுத்தத்தைக் கண் காணிப்பதற்கு அரசாங்கத் தால் நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவர் குழுவை எக்கார ணம் கொண்டும் அரசாங்கம் மாற்ற மாட்டாது'' என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்

## மத்திய அரசுக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ழீழ ஆதரவாளர் கழகம்' நட த்திய கூட்டமொன்றில் பேசு கையில் வலியுறுத்தியுள்ளார். கோயம்புத்தூரில் இக்கூட் டம் நடைபெற்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மத்திய அரசுக் குச் சிறிதேனும் அக்கறை யில்லை என்றும் தலைவர் கரு ணாநிதி குற்றம் சாட்டினார்.

மேற்கு சகாராவில் பொலி சாரியோ முன்னணியால் அமைக்கப்பட்டுள்ள சாகி அரபு ஜனநாயகக் குடியரசை அங்கீகரித்திருப்பது போல் இலங்கையிலும் தமிழீழ இயக் கத்தையும் இந்தியா அங்கீக ரிக்க வேண்டும் என்றும் கலை ஞர் கருணாநிதி வேண்டு கோள் விடுத்தார். (ப-மா)

## நேற்று மினிபஸ் சேவை நிறுத்தம்

(வேலணை)

புங்குடுதீவுக்கும் யாழ்ப் பாணத்துக்கும் இடையில் சேவைபுரியும் சுமார் 80 க்கு மேற்பட்ட மினிபஸ்கள் நேற்று 7-ம் திகதி சேவையில் ஈடுபடவில்லை. இச்சேவையில் ஈடுபடும் மினிபஸ் உரிமை யாளர்களிடம் நாளாந்தம் பெறும் வருமானத்தில் ஒரு சிறுதொகையைத் தங்களுக்கு வழங்க வேண்டுமென ஓர் இயக்கம் கோரிவந்ததாகவும் இதனை ஆட்சேபித்தே மினி பஸ் உரிமையாளர்கள் இச் சேவை நிறுத்தத்தை மேற் கொண்டதாகவும் கூறப்பட் டது.

## கொக்குவில் மேற்கு விழிப்புக்குழு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு பகுதி யில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவ்வூர் மக்களின் நன்மை கருதி விழிப்புக்குழுவொன்று ஆங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மஞ்சவனப்பதி முருகன் ஆலயமுன்றலில் நடைபெற்ற அங்குரார்ப்பண கூட்டத்திற்கு சட்டத்தரணி பொ. நவரத்தினம் தலைமை வகித் தார்.

## தீவிர சோதனை

மட்டக்களப்பு)

வந்தாறுமூலை, தன்னாமுனை ஆகிய பகுதிகள் நேற்றமாலை கொமாண்டோ பொலிசாரி னால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிர சோதனை நடாத்தப்பட்டது.

சுமார் 3 மணித்தியாலங்கள் இச்சோதனை இடம்பெற்றது. (மா)

## 17 அடி உயர ஸ்தூபிகள்

(பண்டத்தரிப்பு)

முன்னாள்மானிப்பாய் எம். பி. வி. தர்மலிங்கம், கோப்பாய் முன்னாள் எம். பி. மு ஆலால சுந்தரம் ஆகிய இருவருக்கும் அவர்களது சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்ட இடங்களில் பதினேழு அடி உயரமான இரு நினைவுஸ்தூபிகள் நிறுவப்பட வுள்ளன. அமரர் வி. தர்மலிங் கத்தின் சடலம் கிடக்கக்காண ப்பட்ட இடமான தாவடியி லும், அமரர் ஆலாலசுந்தரத் தின் சடலம் கிடக்கக் காணப் பட்ட இடமான கல்வியங்காட் டிலும் கிராம மக்கள் சார்பில் இந்த இரு நினைவுஸ்தூபிகளும் விரைவில் அமைக்கப்படவிருப் பதாவும் தெரிவிக்கப்படுகின் றது.

## பொலிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள தமிழ் மக்கள் கிண்ணி யாப் பகுதியில் தஞ்சம் புகுந் துள்ளனராம்.

பொலிஸ் நிலையத் தாக்குத லின்போது மரணமானவர் களின், காயமடைந்தவர்களின் பற்றிய விபரமெதுவும் கிடை க்கவில்லை.

பொலிசாரும், இராணுவத் தினரும் தீவிரவாதிகளின் இத் திடீர்த் தாக்குதலை முறியடித் தனர் என்றும், இச்சம்பவத் தின் பின்னர் நடைபெற்ற தேடுதலின்போது இரத்தம் தோய்ந்த ஆடைகளும், வெடி மருந்துகளும் கைப்பற்றப் பட்டதாகவும் அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது. (ப-மா)

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்தத்தைக் கண் காணிப்பதற்கு வெளிநாட் டைச் சேர்ந்த தனிநபரோ, அல்லது தாபனத்தினரோ நிய மிக்கப்படுவது அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மாட்டாது என்றும் அவர் கூறினார்.

# உலக லயன்ஸ் சேவை தினம்

(சுண்டுக்குளி)

உலக லயன்ஸ் சேவை தினம் அக்டோபர் மாதம் 8ந் திகதி ஒவ்வொருவருடமும் சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது. அன்றை தினம் பலவித சேவைத் திட்டங்களை இக் கழகங்கள் நிறைவேற்றிவைக்கும்.

இத்தினத்தையொட்டி வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் இலவச மருத்துவ சிகிச்சை நிலையமொன்றை நவாலி வை எம். சி ஏ. மண்டபத்தில் இன்று ஆரம்பித்து இன்று காலை தொடக்கம் லயன்ஸ் மருத்துவர்களினால் இலவச சேவையளித்து மருந்துகளும் வழங்கப்படவுள்ளன.

லயன் கன்வரும், வட்டு லயன்ஸ்கழக சுகாதார சேவைகள் குழுத் தலைவருமான டாக்டர் ரி. டகிரதன் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார். இலவச சிகிச்சை நவாலியில் உள்ள நன்கு பாலர் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் அகதிகளாக வந்திருக்கும் குழந்தைகளுக்கும் வழங்கப்படும் சிகிச்சைக்கு வேண்டிய சகல உதவிகளையும் நவாலியில் உள்ள வை எம். சி. ஏ. சங்கம், நவாலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், சென் பீற்றர்ஸ் சனசமூக நிலையம், முருகானந்தா சனசமூக நிலையம், முரசொலி சனசமூக நிலையம், வளர்மதி சன சமூக நிலையம், பாரதி சனசமூகநிலையம் ஆகிய பொது ஸ்தாபனங்கள் செய்து கொடுத்ததாக வட்டுலயன்ஸ் கழகத்தலைவர் லயன் டபிள்யூ. என். தேவடாட்சம் கூறியுள்ளார்.

## மரம்நாட்டும் இயக்கம்

[சுண்டுக்குளி]

உலக லயன்ஸ்சேவை தினத்தையொட்டி வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் இம்மாதம் மரம் நடும் இயக்கமொன்றை ஆரம்பிக்க உள்ளனர்.

வெளியானவளவுகளில் அதிக பயன் தரக்கூடிய மரக்கன்றுகளை நடுவதற்கு இலவசமாக விநியோகிக்க வட்டு லயன்ஸ் கழக செயலாளரும், கழக விவசாய குழுத் தலைவருமான லயன் எஸ். ரி. சிவத்திலிங்கம் மற்றைய அங்கத்தவர்களுடன் சேர்ந்து இதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

## ஆழ்கடலில் பலி

(பண்டத்தரிப்பு)

ஆழ்கடலில் பலியான மாதகலைச் சேர்ந்த செல்வன் லோ. நிர்மதாஸின் அகால மரணம் குறித்து மாதகல் சென். ஆன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் ஒன்றை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

## அகதிமுகாம்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். அகதிகள்முகாமுக்கு பதினொருபேரைக் கொண்ட மேலும் 8 குடும்பங்கள் வந்துள்ளன. இக்குடும்பங்கள் சுமார் இருவார காலம் யாழ்ப்பாணத்திலுள்ள தமது உறவினர்கள் வீட்டில் தங்கி இருந்த பின் நேற்று முகாமுக்குவந்து சேர்ந்தனர்.

மூன்றுதீவிலிருந்துமேலும்பல குடும்பங்கள் இங்குவருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் யாழ். நகரில் சில கூளை முகாம்கள் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

நேற்று சுண்டிக்குளி மாணவிகள் சிலர் அகதிகள் முகாமுக்கு வந்து அகதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களின் குழந்தைகளுக்கு பால்மாவும், உடுப்புக்களும் வழங்குவதற்கான ஏற்பாட்டை செய்வதற்காக உறுதி அளித்துச் சென்றுள்ளனர். [ஐ]

## இலக்கியப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இன்றைய ஈழத்துத் தமிழ் மக்கள் பிரச்சனைகளை மையமாகக்கொண்டு நாட்டின் சட்டங்களுக்கமைவதாக ஆக்கங்களை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் தமிழ் மன்றம் எழுத்தாளர்களிடம் எதிர்பார்க்கிறது. அகில இலங்கை ரீதியில் சிறுகதை, கவிதை, குறுநாவல் என்பவற்றில் போட்டி நடாத்தப்படும். எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிக்கு முன் கலாநிதி இ. பாலசுந்தரம் பொருளாளர், தமிழ்மன்றம், பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு போட்டிக்கான ஆக்கங்களை அனுப்பி வைக்க வேண்டும். (ஜ)

## 1,25,000 ஏக்கர் விளைச்சல் நிலம் பாதிப்பு

(கொழும்பு)

மண்ணெண்ணெய்பிக்எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக 1,25,000 ஏக்கர் நிலத்தில் நெல் விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இம்மாதம் 10ம் திகதிக்கு முன் விதைப்பு நடைபெற வேண்டியிருப்பதால் அதற்கு முன் எரிபொருள் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ட)

களாக வந்திருக்கும் பிள்ளைகளுக்கு கொடுப்பதற்காக தங்களால் இயன்ற பல பொருட்களை ஒய்வுநாட் பாடசாலை அதிபர் திரு. டபிள்யூ. என். தேவடாட்சம் அவர்களிடம் கொடுத்துள்ளனர்.

இப்பொருட்களை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் மூலம் வழங்குவதற்கு அதன் இணைக்குனர் சபை ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

மேலும் பிள்ளைகள் பொருட்களைச் சேகரிப்பதற்காக நவாலி ஒய்வுநாட் பாடசாலை ஆசிரியைகளான திருமதி டபிள்யூ. ஜி. அன்னப்பா, செல்வி எஸ். துராசமணி, திருமதி சாம் செல்லையா, செல்வி இ. ஜெயமணி, திருமதி அ. செயமணி, திருமதி பி. கந்தசாமி, செல்வி இ. தேவரஞ்ஜினி ஆகியோர் அதிபருடன் சேர்ந்து இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சேகரிக்கப்பட்ட இப்பொருட்களை அனைத்துலக சிறுவர் தினமாகிய இம்மாதம் 9-ந் திகதி இப்பரீட்சையில் பங்குபற்றினார்கள்.

இப்பரீட்சையில்சித்திபெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பிரிவு அத்தியட்சகர் திரு. நா. போஜன் தலைமையில் நடைபெறும். இவ் வைபவத்தில் சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் யாழ் மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுந்தரன் இன்றுசித்தம்பி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்குவார்.

# செய்திச்சிதறல்

## அபராதம் ஐந்து மடங்கு உயர்வு!

(கொழும்பு)

இ. போ. ச. பஸ்களில் டிக்கட் இன்றிப் பிரயாணம் செய்வோரின் அபராதத்தொகை 5மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம் நேற்று முதல்அமுலுக்கு வந்துள்ளதாக இ. போ. சபை தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் டிக்கட் இன்றிப் பயணம் செய்தவர்களுக்கு 20 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இம்மாதம் 7ம் திகதி தொடக்கம் 100ரூபா அபராதமும் இருமடங்குபணம் செலுத்தி டிக்கட்டும் பெற்றுக் கொள்ளவேண்டியிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-மா)

## அகதிகளுக்கு நேசக்கரம்

சுண்டு'குளி)

திருகோணமலை, வவனியா ஆகிய இடங்களிலிருந்து அகதிகளாக நவாலியில் வந்திருக்கும் குடும்பங்களுக்கு உதவுமாறு நவாலிப் பிரஜைகள்குழுவினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று இப்பகுதி பொதுஸ்தாபனங்களாகிய சென் பீற்றர்ஸ் சனசமூக நிலையம், முருகானந்தா சனசமூக நிலையம், வை எம் சி ஏ சங்கம், வளர்மதி சனசமூக நிலையம், முரசொலி சனசமூக நிலையம், சென் பீற்றர்ஸ் அ.ரு. க. பாடசாலை ஆகிய பொது ஸ்தாபனங்கள் அதிக கவனமெடுத்து, இப்பகுதி மக்களிடமும், வர்த்தகநிறுவனங்களிடமும் உணவு, உடை, மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

சேகரிக்கப்பட்ட பொருட்களை விரைவில் வழங்குவதற்கு நவாலி பிரஜைகள் குழுத் தலைவர் திரு ந. யோகநாதனும் செயலாளர் திரு. ஜெ. சின்னத்துரையும் ஒழுங்குகளை மேற்கொண்டுவருகின்றனர்.

நவாலி தருச்சபைஒய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகள், அகதிப் பிள்ளைகளுக்கு கையளிக்கப்படுமென இப்பாடசாலை அதிபர் கூறியுள்ளார்.

## கோரிக்கைக்கு இணக்கம், வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இணுவில் தெ. ப. பொ. உ. விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்களால் நேற்று திங்கட்கிழமை நடத்தப்படவிருந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது

மேற்படி தொழிலாளர்கள் சங்கத்திடம் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட இருந்தனர்.

இந்த இரண்டு கோரிக்கைகள்ஒன்றுக்கு சங்கம் இணங்கியுள்ளது. மற்றக்கோரிக்கைக்கு ஒருமாத கால அவகாசம் தரும்படி சங்கம் தொழிலாளர்களைக் கேட்டதினால் இதற்கிணங்கிய தொழிலாளர் சங்கம் நேற்று திங்கட்கிழமை நடத்தவிருந்த வேலைநிறுத்தத்தைக் கைவிட்டது. எனினும் ஒருமாத அவகாசம் கேட்கப்பட்ட கோரிக்கையைக் கூட்டுறவுச் சங்கம் தகுந்தமுறையில் தீர்க்காவிட்டால் கால அவகாசம் முடிந்ததும் வேலைநிறுத்தம் செய்யப்படும் எனத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கூட்டுறவுச் சங்கத்துக்கும், தொழிலாளர்களுக்குமிடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பிரதிகள் பனம் பொருள் கூட்டுறவு ஆணையாளருக்கும், சங்கப் பொதுமுகாமையாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன (ஐ)

## பத்திரிகை விற்பனைக் கடையும் தீக்கிரை

(வவனியா)

வவனியாவில் தலைதூக்கிய வன்முறைச் சம்பவத்தில் பிரபல பத்திரிகை ஏஜண்ட் 'கவிதா ஸ்ரோர்ஸும்' முற்றாக எரிக்கப்பட்டுள்ளது.

பஸ் நிலையத்தில் மட்டும் பத்துக்கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(பண்டத்தரிப்பு)

சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய் தெல்லிப் பிரிவில் முதலுதவிப் பயிற்சி பெற்றவர்களுக்கான செய் முறைப்பயிற்சி பரீட்சையும்பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது

சுமார் 600பயிற்சியாளர்கள்

## விநாயகர் ஆலய நிர்வாகிகள்

(ஊரெழு)

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கென புதிய நிர்வாக சபையொன்றினைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டமொன்று ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. தற்காலிகத் தலைவர் திரு. து. இலகுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்தில் கிராமத்திலுள்ள ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர் பின்வருவோர் புதிய உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர்: திருமதி பொன்னம்மா கிருஷ்ணபிள்ளை, உபதலைவர் க. சபாரத்தினம், செயலாளர் த. துரைராசா, பொருளாளர்: த. தம்பிராசா, குழு உறுப்பினர்கள் க இளையதம்பி, சி. குலோத்துங்கமுதலியார், பொ. துரைரத்தினம், இ. பொன்னுத்துரை, த. மகாலிங்கம், கணக்காய்வாளர்கள்; வி. முத்துவேலு, ச. நாகலிங்கம், காப்பாளர்; ச. கனகசாபதி, எஸ் மகேந்திரன், மா. நடராத்தினம்.

## உணவு முத்திரை படிவம் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்வறுமை நிவாரணத் திட்டத்தின்கீழ் உணவு முத்திரை பெறுபவர்களுக்கான 'அ' படிவங்கள் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் அவ்வப் பகுதி கிராம சேவை அலுவலர்களினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதற்கான ஒழுங்குகளை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் செய்துள்ளார்.

## ஐ. நா. தின கட்டுரைப் போட்டி

(சுண்டுக்குளி)

இம் மாதம் 24ந் திகதி ஐக்கிய நாடுகள் தினமாக சர்வதேச ரீதியில் நினைவு கூரப்பட இருப்பதையொட்டி வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் கழக எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் க. பொ. த உயர்தர வகுப்பு மாணவரிடையே ஒரு கட்டுரைப் போட்டியையும் நொடிவினாப் போட்டியையும் பொது அறிவை வளர்க்கும் பொருட்டு நடாத்த உள்ளனர்.

இப் போட்டிக்கான ஒழுங்குகளை லயன்ஸ் கல்விச்சேவைகள் குழுத்தலைவரும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருமான டாக்டர் வி. நித்தியானந்தன் செய்து வருகின்றார் இவற்றில் பங்கு கொள்ள விரும்பும் பாடசாலை அதிபர்கள் இவருடன் தொடர்பு கொள்ளலாம் என்று வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக தலைவர் லயன், டபிள்யூ என். தேவடாட்சம் தெரிவிக்கின்றார்

## திருச்சொரூப பவனி

(உடுவில்)

உடுவில் புனித செபமாலை மாதா கோவில் நவநாள் திருப்பலி பூசைகள் சிறப்பாக நடைபெற்று கடந்த ஞாயிற்றுக்கிழமை திருச்சொரூப பவனியுடன் விழா நிறைவு பெற்றது.


மேற்கு ஜேர்மன், பிரான்ஸ், கனடா, இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி உங்களை

OCTOBER 12-ம் திகதி

அழைத்துச் செல்வார்

அவுஸ்திரேலியா, அமெரிக்கா

போன்ற நாடுகளுக்கு விசா பெற்றுத்தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட், விசா

என்பனவற்றுக்கும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

லிப்ரஸ் லிமிட்டெட்,

R. G. கட்டிடம், 70, ஸ்ரான்லிவீதி,

யாழ்ப்பாணம்.



86 A/L DAY CLASS

2-ம் பிரிவு ஆரம்பம் 10-10-85 காலை 8-00 மணி

(எமது வழமையான ஆசிரியர் குழுவினல்)

விபரங்களுக்கு:

NEW MASTER INSTITUTE

B. M. C. LANE, JAFFNA.

## பேச்சு....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)
குறித்து குறிப்பிட்ட அவர் சமீப ஆண்டுகளில் பல்வேறு துறைகளிலும் இரு நாடுகளும் கூட்டான முயற்சிகள் மூலம் கணிசமான வளர்ச்சியினை கண்டுள்ளன தென்றும், மேலும் இந்த முயற்சியினை வளர்த்துக் கொள்ள சிறப்பான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் கூறினார். (ரா)


சரவணபவன்
மினி சினிமா
[4 அடி அகலத்திரையில்]
10-30, 2-30, 4-30, 7-00
Indiana Johnes

வீரேசிடி மினி
10-30, 2-30, 4-45; 7-00
Danger
Diabolik

கிராண்ஸி மினி
X⁰ⁿ திரையரங்கில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Chained Heat
அமெரிக்க பெண்களின்
சிறைக் வாழ்க்கையை
சித்தரிக்கும் படம்;

உஷா மினி
10-30, 2-30, 4-45; 6-45
TORNADO
Last Hunter படத்தை
விட சிறந்த விறுவிறுப்பான தாக்குதலைக்
கொண்ட புதிய வெளியீடு

எம்பயர்
7 அடித் திரையில்
தினசரி 10-30, 2-30,
6-15, இரவு 9-00
மோகராஜன் 3 வேடம்
சரிதா நம்பியார்,
சத்யராஜ்
எரிமலை
சினிமாஸ்கோப்
புதிய வெளியீடு

மனோகரா
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
டார்லிங்
Darling
டார்லிங்
பாக்கியராஜ்-பூர்ணிமா-
ஜெயராம்-
கல்லாபெட்டி சிங்காரம்
(கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-30,
பாக்கியராஜ் - சுமதி
நடித்த
சுவரில்லாத சித்திரம்
[கலர்]

ரீகல் சினிமா
2-30, 5-30, 6-4
சிவகுமார்- ஜெயசித்திரா
நடித்த
வெள்ளிக்கிழமை
விரதம்
புத்தம் புதிய பிரதி


# 83 கலவரத்திலும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)
"மட்டக்களப்பு ஏன் போனீர்கள்?"

"அங்கு தெரிந்த ஆட்கள் இருந்தார்கள். எங்கள் சொந்த இடம் யாழ்ப்பாணம் மட்டக்களப்புக்குப் போய் 3 பிள்ளைகளுடன் இங்கு வந்தேன்"

"நீங்கள் வந்து எத்தனை நாள்!"

"3 கிழமை இருக்கும்"

"அவரிடமிருந்து கடிதம் வரவில்லையா?"

"தபால் ஒன்றும் வரவில்லை முதல் ஒரு கடிதம் வந்தது. அதன் பின்வரவில்லை"

"என்ன எழுதியிருந்தார்?"

"சாப்பாட்டுக்குத் தான் கஷ்டமாக இருக்கிறது, பஸ் வந்தால் வருவேன் என்று எழுதியிருந்தார்"

"கடைசிப் பிள்ளைக்கு எத்தனை வயது?"

"ஒன்பது மாதம்"

"இனிமேல் நீங்கள் திருமலை போவது பற்றி...?"

"இனி அங்கு போய் இருப்பது என்றால் கஷ்டம்தான். இருக்க ஏலாது"

"உப்புவெளியில் உங்கள் சொந்த வீடா, வாடகை வீடா?"

"இவை அண்ணனின் சொந்தக் காணி"

"அண்ணன் அங்கு இருக்கின்றாரா?

"அவர் எங்கேயென்று தெரியாது இப்படி திக்குத் திக்காய் வெளிக்கிட்டுப் போனவர்கள்"

"சம்பவத்திற்கு முன் எல்லோரும் அங்குதான் இருந்தீர்களா?

"அங்குதான் இருந்தோம்"

"பிள்ளைகளுக்கு என்ன பெயர்?"

"முதல் பிள்ளைக்கு அனுஷா ஆறுவயது: இரண்டாவது அவரோடு நிக்கிறாள் பெயர் பாமினி 5 வயது. மூன்றாவது வினோத்: 2 வயது

"இந்தப் பிள்ளை ...கு?

இது நாலாவது பிள்ளை எட்டு மாதம் பெயர் சரஞ்சா:

கணவர் பாஸ்கரன் ஒரு பிள்ளையுடன் திருமலையில் இருக்கிறார். அவர் வருவார் என்ற நம்பிக்கையுடன் இம்முகாமில் இவர் தங்கியிருக்கிறார். ஒரு இளம் பெண் கைக் குழந்தையுடனும் மற்றும் இரு சிறுவர்களுடனும் தட்டத்தனியப் புறப்பட்டு மட்டக்களப்புச்சென்று அங்கிருந்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

(தொடரும்)

## ஹெலிகொப்டரில் இருந்து துப்பாக்கிச் சூடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலுள்ள குளமுறிப்பு என்ற இடத்தில் மோட்டார் சைக்கிளில்சென்ற இரு இளைஞர்கள் மீது பாதுகாப்புப்படையினர் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

கடந்த 7ம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தின் போது மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் தப்பி விட்டதாக கூறப்படுகிறது.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்

சுழிபுரம் என்னுமிடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தையா என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும் உடைமைப் பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்
கந்தையா கைம்பெண்
சிதம்பரம். சுழிபுரம்:
மனுதார்;

வழ: இல: T/220
எதிராக

1. கந்தையா திசைரத்தினம்
2. கந்தையா ஆனந்தரத்தினம்
3. கந்தையா மகள் இரத்தினலட்சுமி
4. கந்தையா சந்திரரத்தினம்
5. கந்தையா மகள் இந்திராணி
6. கந்தையா சூரியரத்தினம்
7. கந்தையா முருகரத்தினம்
8. கந்தையா மகள் விஜயராணி

பராய மற்றவர் } 9. கந்தையா மகள் விஜயலட்சுமி

மேற்கூறிய 9ம் எதிர்வாதி பராயமடையாததால் இவரின் பராமரிப்புக்காரர்

10. கிருஷ்ணர் கந்தையா சுழிபுரம்.

எல்லாரும் சுழிபுரம்
எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆனி மாதம் 12ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் திகதி
நீதிமன்ற ஆணைப்படி

சு. வேலாயுதம்
பதில் பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது!
தா. சங்கரப்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி
12 6-85

காரணம் காட்டும் திகதி 28-8-85வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதிவாளர்.
28-8-85

காரணம் காட்டும் திகதி 16-10 85வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதிவாளர்.
(1082)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமெதுவுமின்றி காலஞ்சென்ற அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் கந்தசாமி கைம்பெண் மனோன்மணி விட்டுச்சென்ற சொத்துக்கள் சம்பந்தமாக

மரணமெய்தியவர்

வழ.இல: தத்துவம்/3875

1. கணபதிப்பிள்ளை சிவபாதலிங்கமும்
2. பெண் பிரேமலதாவும் இருவரும் அரசடி ஒழுங்கை திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கம்கொண்ட தத்துவ வழக்கில் மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களையும், உடமைப் பொருட்களையும் நிர்வகிப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மனுதார் நிர்வாகப்பத்திரம் தனக்கு வழங்குமாறு இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கைத் தொடுத்தமையினால் இந்நீதிமன்றம் அவர் கோரிக்கைக்கு இணங்கி பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

இது சம்பந்தமாக அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆனி மாதம் 28ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி இவ்வழக்கில் பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குத் தக்க காரணமிருப்பின் அதனை நீதிமன்றத்துக்குக் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

இந்த 1985ம் ஆண்டு மாசி மாதம் 27ந் திகதி
நீதிமன்றக் கட்டளைப்படி.

க. நாகேந்திரன்
பதிவாளர்.
யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றம்.

என்னால் வரையப்பட்டது.
பொ. காங்கேயன்
மனுதாரின் சட்டத்தரணி.
23-8-85

காரணம் காட்டும் திகதி 11-10-85க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

பதிவாளர்.
(112)

வட்டார ரீதியில்

# யாழ். இந்து ஆரம்பபாடசாலை முதலிடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்: இந்து மகளிர் கல்லூரியில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. சிவநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நல்லூர் வட்டாரப் பாடசாலைகளுக்கான இசை, நடனம், நாடகப் போட்டிகளில் யாழ்: இந்து ஆரம்ப பாடசாலை ஆரம்ப பிரிவில் தனி நிகழ்ச்சி பெண்களுக்கு கிராமிய நடனத்தில் முதலாம் இடத்தையும், குழு நிகழ்ச்சியில் கிராமிய இசையில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளது.

இரு முதலாம் இடங்களையும், மூன்றும் இடம் ஒன்றினையும் இது பெற்றுள்ளது குறித்து பாராட்டப்பட்டுள்ளது.

# இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 22 (8-10-85)
செவ்வாய்
திதி: நவமி
நட்சத்திரம்: புனர்பூசம்

மேடம்: உள்ளத்தில் உவகை கூத்து. வாழ்க்கை இன்று உற்சாகம் நிரம்பியதாகவிருக்கும்: முதலீடு செய்வதற்கு உகந்த தினம்.

இடபம்: அமைதிக்குப் பங்கம் ஏற்படும். பிறர் விடயத்தில் தலையிடாதிருக்கவும். குடும்பத்திலே பிரிவும் ஏற்படலாம்.

மிதுனம்: உடல் நலம் பாதிக்கப்படலாம். வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும்: கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும்.

கடகம்: குடும்பத்தில் குதூகலிப்பு. தொழில் சமவிருத்தி. வாகன நலனும் உண்டு. கல்வி முன்னேற்றத்திற்கும் இடமுண்டு.

சிங்கம்: சகோதர சஞ்சலம் வீண்பழி இவற்றிற்குமிடமுண்டு: குடும்பத்திலும் பொறுமையுடன் நடந்து கொள்ளவும். சமயோசித புத்தி விரும்பத்தக்கது.

கன்னி: அன்பையின் ஆகியுண்டு: அன்னியர் உதவியுண்டு: வாகன நலனுமுண்டு.

துலாம்: ... வணிகர்களுக்கு வளமான திருப்தியுண்டு.

விருச்சிகம்: எதிலும் தாக்கலைப்பாள்மை தோன்றும். பணம் பலவழிகளிலும் செலவாகும். உமது நடவடிக்கைகளை எதிர்கள் வேவு பார்ப்பர்.

தனுசு: ஸ்திரவழி சுகம் உண்டு. எண்ணிய கருமமும் கைகூடலாம்: திடீர் பிரயாணங்களும் ஏற்படலாம்: சுப தினம்.

மகரம்: தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். உடல் தொல்லை அதிகரிக்கும். வைத்தியச் செலவுமுண்டு. அமைதி நன்று.

கும்பம்: பிதாவழித் தனவரவுண்டு. பிரிந்தவர் இன்று இணைவர், பதவியுயர்வுக்கும் வழிகோலப்படலாம். சாதாரண தினம்,

மீனம்: இலங்கிய நோக்குடன் செயலாற்றுவீர்கள் சிலருக்கு வாகன சுகமுமுண்டு வாழ்விலும் திருப்தியுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்


இதோ வெளிவந்து
விற்பனையாகிக்கொண்டிருக்கிறது!
சீவம் இண்டஸ்றீசாரின்
தீபாவளி வாழ்த்துமடல்கள்
விலை விபரம்:

| | | |
|---|---|---|
| No. 1 | கட்டிங் காட் 100-க்கு | 550-00 |
| No. 2 | இரு பக்க ஆட்போட் படம் | 300-00 |
| No. 2 | இரு பக்க ஆட்போட் படம் | 225-00 |
| No. 3 | கட்டிங் காட் | 250-00 |
| No. 4 | இரு பக்க ஆட்போட் படம் | 250-00 |
| No. 5 | கட்டிங் காட் | 200-00 |
| No. 6 | பெரிய இரு மடிப்பு | 200-00 |
| No. 7 | இரு மடிப்பு: பூகாட் | 100-00 |
| No 8 | சிறிய இரு மடிப்பு | 50-00 |
| | போஸ்ற் காட் | 27-00 |

தொடர்புகொள்ளவும்:
சீவம் இண்டஸ்றீஸ்
மாவிட்டபுரம் கிழக்கு, தெல்லிப்பளை.
(1122)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## கொள்ளை!

(மூதூர்)

மூதூர் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திலிருந்து சீனி, அரிசி, உடுபிடவைகள், சில்லறைச் சாமான்கள் முழுவதும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை இக்கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றது. (ய - மா)

## ஜி. சி. ஈ. நுண்கலைப் பிரிவு மாணவர்கள் அவதி

(மானிப்பாய்)

சென்றவருடம் பெப்ரவரியில் நடைபெற்ற ஜீ. சி. ஈ. சாதாரணவகுப்புப் பரீட்சையில் நுண்கலைப் பாடங்களான சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான பெறுபேறுகள் இன்னமும் வெளிவராததால் இப்பாடங்களில் தோற்றிய வடபகுதி மாணவர்கள் தமது கல்வியைத் தொடரமுடியாத வொரு சூழ்நிலையிலிருக்கின்றார்கள்.

குறிப்பாக ஜீ. சி. ஈ. உயர்தர நுண்கலைப்பாட நெறிப்பிரிவில் சேர்ந்து பயிலவிரும்பும் மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரியவருகிறது.

மற்றைய பாடநெறிப் பிரிவுகளின் பெறுபேறுகள் வெளியாகி அவர்கள் தமது ஜீ. சி. ஈ. உயர்தர வகுப்புகளில் பயின்று கொண்டிருக்கையில் இப்பாடங்களில் தோற்றியவர்கள் அவ்வாறு தொடரமுடியாத நிலையில் குழப்பத்துக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

சென்ற பெப்ரவரியில் நடைபெற்ற இப்பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் இன்னமும் வெளியாகவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் — இராமேஸ்வரம் கப்பல் சேவை

(சென்னை)

இராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்குமிடையே நடைபெற்று வந்த கப்பல் சேவை பல மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் தமிழ்நாட்டிலுள்ள மக்கள் பெரும்கவலைகொண்டிருப்பதாகவும், ஆகவே இக்கப்பல் போக்குவரத்தை மீண்டும் நடைபெறச் செய்ய ஆவன செய்யவும்'' என்று உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு இரா. ஜனார்த்தனன், இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்துள்ள தந்திமூலம் தெரிவித்துள்ளார்.

அத்தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- இக்கப்பல் போக்குவரத்திற்குப் பயன்படும் 'ராமானுஜம்' கப்பல் அதன் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக வந்த செய்தி அதிர்ச்சியைத் தருகிறது என்றும் அத்தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தனிப்பட்ட கொள்ளைகளுக்கு கடும் தண்டனை!

### 'ஈ. பி. ஆர். எல். எவ்' எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் நடந்த சில தனிப்பட்ட கொள்ளைகள் சம்பந்தமாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்.) ஆயுதப்பிரிவான மக்கள் விடுதலைப் படைப்பிரிவு (பி. எல் ஏ.) இம்மாதம் ஐந்தாம் திகதி இருவரைக் கைதுசெய்து சரியான விசாரணையின் பின்னர் இருதித்தடவையாக எச்சரித்து விட்டு நேற்றுக்காலை காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

மக்கள் விடுதலைப்படை (பி எல் ஏ.) யினால் விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலில் இவ்விதத் தனிப்பட்ட கொள்ளைகளில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## ட்ராக்டரில் வந்த ஏழு பேர் சுட்டுக்கொலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் ட்ராக்டரில் சென்றுகொண்டிருந்த ஏழு பேர் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை நோக்கி ஆயுதப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மற்றவர் தப்பிஓடிவிட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவில் 9 பகுதிகளில் இன்று 'ஆ' படிவம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஒன்பது கிராமசேவை அலுவலர்களின் பகுதிகளில் உணவு முத்திரை பெறுவதற்கான 'ஆ' படிவங்கள் நியமிக்கப்பட்ட குழுக்களுக் குறிப்பிடப்பட்ட எல்லா இடங்களிலும் இன்றுகாலை 8மணிமுதல் மாலை 5மணி வரை வழங்கப்படுமென உதவி அரசாங்க அதிபர் திரு கே. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

அவ்வப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்களால் பூர்த்தி செய்யப்பட்ட 'அ' படிவங்களை சமர்ப்பித்தபின்னரே 'ஆ' படிவங்களை பெற்றுக் கொள்ளமுடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரியவிளான் பிரிவில் 8, 11, 12 ஆகிய திகதிகளிலும், சண்டிலிப்பாய் பிரிவில் 9, 10, 13, ஆகிய திகதிகளிலும், பண்டத்தரிப்புப் பிரிவில் 8, 9, 10, 1 ஆகிய திகதிகளிலும், நவாலி பிரிவில் 9, 10, 11, 12 ஆகிய திகதிகளிலும், மானிப்பாய் பிரிவில் 10, 11, 13 ஆகிய திகதிகளிலும், ஆனைக்கோட்டைப் பிரிவில் 8, 9, 10, 11 ஆகிய திகதிகளிலும், மாதகல் பிரிவில் 8, 9, 10 ஆகிய திகதிகளிலும், சுதுமலைப்பிரிவில் 8, 9, 10, 11 ஆகிய திகதிகளிலும் சங்கானை வடக்குப் பிரிவில் 10, 11, 12 ஆகிய திகதிகளிலும் 'ஆ' படிவங்கள் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தினங்களில் குறிப்பிட்ட இடங்களில் இப்படிவங்களைப் பெறத்தவறுபவர்களுக்கு பின்னர் ஒருதிகதியிலும் வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. [ச]

## மரண அறிவித்தல்

### பொன்னையா கந்தவனம்

வைதடி, நுணாவில் இளைப்பாறிய ஆசிரியர் பொன்னையா கந்தவனம் இந்தியாவில் 5-10-85ல் காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னையா தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி வெற்றிவேலு தம்பதிகளின் மருமகனும், இளைப்பாறிய ஆசிரியை இரத்தினத்தின் அன்புக்கணவரும், லோகேஸ்வரன் (மே. ஜெர்மனி), ஐகேஸ்வரன் (கனடா), தவேஸ்வரன் (பிரான்ஸ்), நிர்மலானந்தேஸ்வரன் (வேலூர் பொறியியல் கல்லூரி இந்தியா), இரத்தினேஸ்வரி (முன்னாள் எழுதுவினைஞர், இந்துசமய, பிராந்திய அலுவல்கள் அமைச்சு கொழும்பு), சகிகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற வவனியா முன்னாள் கல்வி அதிகாரி வெற்றிவேலு கந்தசாமியின் மைத்துனரும், ஸ்ரீகாந்தரூபன் (தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பரந்தன்), நாகராணி (மே. ஜெர்மனி) ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் வேலூர் இந்தியாவில் நடைபெற்றன. உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

1119 தகவல்:- திருமதி இ. கந்தவனம்.

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளை

(காரைநகர்)

பலாலி ஆசிரியபயிற்சிக் கலாசாலை இளைப்பாறிய விரிவுரையாளர் சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளை காலமானார். அன்னார் காலஞ்சென்ற விசுவநாதர் சங்கரப்பிள்ளை - பார்வதி அவர்களின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கந்தையா- ஆச்சிமுத்து அவர்களின் மருமகனும், அன்னபூரணத்தின் (ஆசிரியை காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மகாவித்தியாலயம்) அன்புக்கணவரும், செல்வி நிர்மலாதேவியின் (யாழ். இந்து மகளிர் கல்லூரி) அன்புத் தந்தையும், திருமதி தங்கம்மா செல்லையா திருமதி பாப்பா கதிரவேலு (ஆசிரியை) காலஞ்சென்ற திருமதி நேசரத்தினம் பாலசுப்பிரமணியம், திரு இராமச்சந்திரன் (நீர் வடிகால் திணைக்களம், கொழும்பு) திரு சோமசேகரம் (கிளிநொச்சி), திரு குணநாயகம் (பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம். காரைநகர்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற டாக்டர் K J கனகசுந்தரம் திரு. K. அழகசுந்தரம். காலஞ்சென்ற செல்வி பரம்சோதி கந்தையா (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 8-10-85 காலை 10.00 மணிக்கு காரைநகர் சேச்சேல் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

1121

## பலாலி இராணுவமுகாம் விஸ்தரிப்பு

### காணிகள் சுவீகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்புக்காக தோட்டக்காணிகள், வீடுகள், கடைகள், கோவில்கள், பாடசாலைகள், உள்ளடக்கிய நிலப் பரப்பை அரசாங்கம் சுவீகரிக்கவுள்ளது என்று 'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) வெளியிடும் 'ஈழம் செய்திப் பலகை' சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவரொட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவில் ஒரு வாரம் தொடர்ச்சியாகத் தேடுதல் வேட்டை, துப்பாக்கிப் பிரயோகம் என்பன நிகழ்ந்தபடி, மக்கள் அகதிக் கோலம் இடம் பெயர முயற்சி. கொக்கிளாய் நாயாறு. கொக்குதொடுவாய் பகுதிகளிலிருந்து 5000 பேர் அகதிகள் முகாம்களில், அகதிமுகாமிலிருந்து வீடு செல்ல இராணுவம் தடை.

முல்லைத்தீவு கூட்டுறவுச் சங்க லொறி மதவாச்சியில் படையினரால் இடை நிறுத்தம், கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் இருவர் கைது.

## வாகனம் திரும்பக் கிடைத்தது

(வவனியா)

கடத்தப்பட்ட வர்த்தகர் அம்பலவாணருடைய வாகனம் ஒன்று திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவருடைய இரு வாகனங்கள் கடத்தப்பட்டன. அவைகளில் ஒன்றான லொறி மட்டும் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி தொடர்ந்து ஸ்தம்பிதம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ்-இராணுவ கூட்டுமுகாமின் சமீபமாக நேற்று முன்தினம் பகல் வேளை ஆயுதப்படையினர் சுட்டதில் ஒருவர் பலியானார்.

இதேவேளை பல நிலையத்திற்கு அண்மையில் உள்ள கடைக்கட்டிடங்கள் தகர்ப்பு வேலையில் ஈடுபட்டுவரும் ஆயுதப்படையினர் பொது மக்கள் பலரை விசாரணைக்குட்படுத்தியிருப்பதாகவும் தெரியவருகிறது.

மரணமானவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருளப்பு தர்மகுலசிங்கம் என்ற அரச ஊழியர் எனத் தெரியவந்தது.

கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ந்து ஆயுதப்படையினர் பலத்த சோதனை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சியில் பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவத்திற்கு பின்னர் மத்திய பஸ் நிலையம், பொதுச்சந்தை,

(5-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை

அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ் பிறவுண்வீதி 11, 2-ம் ஒழுங்கையில் வசித்தவருமாகிய திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை 7-10-85 இல் காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற மலாயன் பென்சனியர் வே கணபதிப்பிள்ளையின் அன்புப்பாரியாரும் திருவாளர்கள் இராமச்சந்திரா (பட்டயப் பொறியியலாளர் சிங்கப்பூர்). பாலச்சந்திரன் முன்னாள் சிநேகர் நிர்வாக இயக்குநர், லண்டன்), Dr தனபாலன் (லண்டன்), திருமதி கமலாசனி துரைரத்தினம். திருமதி வள்ளிமணி நாகராஜா லண்டன்) ஆகியோரின் அருமைத்தாயாரும், திருவாளர்கள் பெ. துரைரத்தினம் (ஆசிரியர் யாழ்ப்பாணம்), சி. நாகராஜா (பட்டயக் கணக்காளர் லண்டன்) திருமதி ஜெயபசலேஸ்வரி இராமசந்திரா (சிங்கப்பூர்). திருமதி லலிதாதேவி பாலச்சந்திரன், திருமதி சரோஜினி தனபாலன் லண்டன்) ஆகியோரின் மாமியாருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-10-85 புதன்கிழமை மேற்படி இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
பெ. துரைரத்தினம்
11, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். 1138

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் காங்கேசன்துறை வீதி. 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — B 1130